பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

# The Valampuri

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ரா
ம்
கோ
சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 32 புதன்கிழமை (16.07.2003) தொலைபேசி - 2223378 ஒலி 209

## நவீன ஆயுதங்களை வாங்கவே

# பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேலுக்கு சென்றார்

## அந்நாட்டு நாளிதழ் தகவல்

(நமது நிருபர்)

**இலங்கைக் கடற்படையை நவீன மயப்படுத்தி அதன் பலத்தை அதிகரிப்பதற்காக 20 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நவீனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கே பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இஸ்ரேலுக்கு வந்திருப்பதாக அங்கிருந்து வெளியாகும் நாளிதழான ''ஹாரே'' (HARRE) செய்தி வெளியிட்டுள்ளது.**

பத்துநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த 10ஆம் திகதி வியாழக்கிழமை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி சகிதம் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இஸ்ரேலுக்குச் சென்றிருந்தார்.

விடுதலைப் புலிகளின் கடற்புலி அணியின் பலம் அதிகரித்துள்ளதாகவும் அதற்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் இலங்கைக் கடற்படை பலப்படுத்தப்படவேண்டும் எனவும், கடற்புலிகளின் தாக்குதல்களை முறியடிக்கக்கூடிய வகையில் நவீனகனரக ஆயுதங்கள், பீரங்கிகள் கொள்வனவு செய்யப்படவேண்டும் எனவும் நீண்டகாலமாக அரசாங்கத்தை கடற்படையினர் கோரிவந்துள்ளனர்.

இதன் அடிப்படையிலேயே பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரியும் இஸ்ரேலுக்குச் சென்று நவீன இராணுவத் தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் நவீன ஆயுத உற்பத்தி நிலையம் ஆகியவற்றைப் பார்வையிட்டுள்ளதுடன் கடற்படைக்குரிய நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத்தலைவர் கேணல் சூசை இன்று சந்திப்பு

(கிளிநொச்சி)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்விக் ரெலிவ்சனுக்கும், விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசைக்குமிடையே நேற்று இடம்பெறவிருந்த சந்திப்பு நடைபெறவில்லை. இச்சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தில் வீரச்சாவடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்களின் வீரவணக்கக் கூட்டங்களில் கேணல் சூசை கலந்துகொண்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கைதான புலி உறுப்பினர் மட்டு. நீதிமன்றில் ஆஜர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்துக்கு அருகில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட 8 விடுதலைப் புலி உறுப்பினர்களும் நேற்று மாலை மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். அவர்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைவரை விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் அப்துல் காபூர் உத்தரவிட்டுள்ளார்.

விடுதலைப் புலி உறுப்பினர்களை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய பொலிஸார் ஆபத்தான ஆயுதங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிக்கை சமர்ப்பித்திருந்தனர்.

விடுதலைப் புலிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் வாகனத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் காவியமான பன்னிருவருக்கும் எழுச்சியுடன் நடந்த அஞ்சலி நிகழ்வு

(பிரதேச செய்தியாளர்கள் குழு)

சர்வதேசக் கடற்பரப்பில் கடந்த யூன் மாதம் 14ஆம் திகதி, விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தில் வீரகாவியமான 12 மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டமும் அஞ்சலி நிகழ்வும் நேற்று யாழ். குடாநாட்டில் எழுச்சிகரமாக இடம்பெற்றது.

வலிகாமம் கோட்டத்தில் மேற்படி சம்பவத்தில் வீரமரணமடைந்த மேஜர் வள்ளுவனின் அஞ்சலி நிகழ்வு, சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயத்தில் அதிபர் க.கைலாசநாதன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பொதுச்சுடரினை வலிகாமம் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி வசந்தி ஏற்றி வைக்க, தமிழ்த் தேசியக் கொடியினை தமிழ்மாறன் ஏற்றிவைத்தார்.

வடமராட்சிக் கோட்ட நிகழ்வுகள், வல்வெட்டித்துறை அம்மன்கோயில் முன்றலில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு முன்னதாக மாணவர்கள் பொதுமக்கள் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் கடலில் வீரச்சாவடைந்த 12 மாவீரர்களின் உருவப்படங்களைத் தாங்கியவாறு பேரணியில் சென்றனர்.

நிகழ்வுகள் வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் தம்பிராசா தலைமையில் ஆரம்பமாகியது. பொதுச் சுடரினை வல்வெட்டித்துறைப் பிரதேசப் பொறுப்பாளர் கிசோர் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியினை வடமராட்சிக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றிவைத்தார்.

தீவக நிகழ்வுகள் நெடுந்தீவு மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் கணேசலிங்கம் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகியது.

பொதுச் சுடரினை மாவீரரின் தந்தை பாக்கியராசா ஏற்றிவைக்க, தேசியக் கொடியினை போராளி ஈழமாறன் ஏற்றிவைத்தார். (இ-5-14)

## தந்தை குத்தியதில் தனயன் காயம்

(யாழ்ப்பாணம்)

தந்தை குத்தூசியால் தாக்கியதில் காயமடைந்த மகன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றிரவு 8 மணியளவில் கொக்குவில் பிடாரியம்மன் கோவிலடியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தின் போது அதே இடத்தைச் சேர்ந்த திவ்வியநாதன் திவ்வியசீலன் (வயது 20) என்பவரே

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நாதஸ்வர மாமேதை

## என்.கே.பத்மநாதன் நேற்றுக் காலமானார்

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் புகழ் பூத்த நாதஸ்வர வித்துவான், நாதஸ்வர கலாபூஷணம் டாக்டர் அளவையூர் என்.கே. பத்மநாதன் (வயது - 72) நேற்று இறைவனடி சேர்ந்தார்.



அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், நோய்வாய்ப்பட்டு, கொழும்பு நவலோக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்றுக் காலை அங்கு உயிரிழந்தார்.

இசை உலகில் ''எழிலிசை வாரிதி'', ''நாதஸ்வரச் சக்கரவர்த்தி'', ''நாதஸ்வர கலாபூஷணம்'', ''கலாசூரி'', ''கான கலாநிதி,'' என பல்வேறு பட்டங்களால் போற்றிச் சிறப்பிக்கப்பட்ட இவர், ஈழத்துக்கு வெளியே இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, கனடா மற்றும் இங்கிலாந்து, ஆகிய நாடுகளில் தனது இசை வெள்ளத்தால் அனைவரையும் கவர்ந்தவர்.

சர்வதேசத்தில் நாதஸ்வர இசையில் தனக்கென ஓர் தனி இசை முத்திரை பதித்த பெருமைக்குரிய கலைஞன் அளவையூர் பத்மநாதனின் இசையால் மயங்காதவர் எவருமில்லை எனலாம்.

இவர் நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் கடந்த 46 வருடங்களாக ஆஸ்தான வித்துவானாக இசை வேள்வி நடத்தியமையை, ஈழத்து தமிழ் நெஞ்சங்களால் எளிதில் மறந்துவிடமுடியாது.

இதேவேளை, அன்னாரின் புகழுடல் இன்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படும்.

இறுதிக் கிரியைகள் இலக்கம் 199/4 கில்னர் லேன் யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

(இ)

## இந்துகலாசார அமைச்சர் மகேஸ்வரன் சீநோரை இன்று பொறுப்பேற்பார்

(யாழ்ப்பாணம்)

வடகடல் நிறுவனத்தை (சீநோர்) இந்துகலாசார அமைச்சு பொறுப்பேற்கும் சம்பிரதாயபூர்வ நிகழ்வுகள் இன்று அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், வடகடல் நிறுவனப் பொது முகாமையாளர் எஸ்.குகராஜன் மற்றும் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்வர்.

இன்றைய நிகழ்வின்போது கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு அமைச்சர் கூரைத் தகடுகளை வழங்கவுள்ளார்.

இதேவேளை, வடகடல் நிறுவனத்துக்கு சொந்தமான கட்டடங்களில் இருந்து படையினரை வெளியேறும்படியும், அங்கு புதைக்கப்பட்டுள்ள மிதிவெடி, பொறிவெடிகளை அகற்றுமாறும், யாழ். படைத் தளபதிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளதாக அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க இன்று வடகடல் நிறுவனத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள மிதிவெடிகள், பொறிவெடிகளை அகற்றும் பணிகள் யாழ்.படைத்தலைமையகத்தால் ஆரம்பிக்கப்படவுள்ளன. (இ)

## புலிகளை திருப்திப்படுத்தும் வகையில் திருத்தியமைக்கப்படுவதால்

# இடைக்கால நிர்வாக சபை வரைபை உடன் கையளிக்கும் சாத்தியம் இல்லை

## சமாதானச் செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்குக்கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாகசபை குறித்த அரசாங்கத்தின் திட்டவரைபு இவ்வார இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ள போதிலும் அரசினால் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகசபை தொடர்பான வரைபு தொடர்ந்தும் திருத்தி அமைககபபடடு வருவதாகவும், இதனால் இவற்றை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்க மேலும் காலதாமதம் ஏற்படலாம் எனவும் சமாதான செயலக வட்டாரங்கள் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பொன்றில் தெரிவித்துள்ளன.

அச்செய்திக் குறிப்பில் சமாதான செயலகம் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது;

ஏற்கனவே அரசினால் அனுப்பப்பட்ட இடைக்கால நிர்வாக சபை வரைபுகளை தமிழீழ விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.

அது போன்று தற்போது தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான வரைபையும் தமிழீழ விடுதலைப் புலிகள் நிராகரித்து விடக்கூடாது என்பதற்காக அரசு இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி வருகிறது. இதற்கமைய நாம் ஒவ்வொரு விடயங்களையும் மிக நுணுக்கமாக ஆராய்ந்து திருத்தங்களை மேற்கொண்டு வருகிறோம்.

மேலும் காலத்துக்குக் காலம் புதிய யோசனைகளும் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்டவரைபுகளில் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மேற்படி திட்டவரைபினை இம்முறையும் தமிழீழ விடுதலைப்புலிகள் உடனடியாக நிராகரித்து விட்டால் அது சமாதான முயற்சியில் மேலும் பின்னடைவையே ஏற்படுத்தும் என அரசாங்கம் கருதுகிறது.

இது விடயத்தில் அரசாங்கம் தொடர்ந்தும் ஆலோசனைகளை நடத்தி வருகிறது என்று அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## பொது நிலைப்பாடு குறித்து முஸ்லிம்கள் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

அரசினால் முன்வைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்டவரைபு குறித்து முஸ்லிம்கள் சார்பில் பொதுவான யோசனை ஒன்றை முன்வைப்பது தொடர்பாக அனைத்து முஸ்லிம் எம்.பிக்களும் ஆராய்ந்து வருகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது பற்றிய ஆரம்ப கட்டக் கூட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச் முகமத் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. மேல்மாகாண ஆளுநர் அலவிமௌலான, கொழும்பு மாவட்ட பொது ஜனஐக்கிய முன்னணியைச்சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி மற்றும் மயோன் முஸ்தபா, வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் இறுதியில் அரசினால் முன்வைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபை குறித்து வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் ஆராய்ந்து யோசனைகளை முன்வைக்காமல் பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் க்ட்சிகளும் பாகுபடின்றி ஒன்றிணைந்து பொதுவான யோசனை ஒன்றை முன்வைக்க வேண்டும் என்ற கருத்தை ஏ.எச்.எம் பௌசி முன்வைத்துள்ளார்.

இதனை மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் ஏற்றுக்கொண்டனர். (உ-10)

## பலாலி, மயிலிட்டிப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த

## 300 குடும்பங்களை இளவாலையில்

# குடியமர்த்த மகேஸ்வரன் நடவடிக்கை

(திருநெல்வேலி)



இராணுவநடவடிக்கைகள காரணமாக பலாலி,மயிலிட்டிப்பகுதிகளிலிருந்துஇடம் பெயர்ந்து நீண்டகாலமாக நலன்புரி நிலையங்களில் அடிப்படை வசதிகள் இன்றிதங்கியிருக்கும் குடும்பங்களை இளவாலைப்பகுதியில் குடியமர்த்த இந்து கலாசார அமைச்சர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

300 வரையான குடும்பங்கள் இவ்விதமாக குடியமர்த்தப்படவுள்ளதுடன் இவர்களுக்கு வீடமைப்பு தொகையாக தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் பயனாளிகளை தெரிவு செய்யும் பொறுப்பு பலாலி மயிலிட்டிப்பகுதி பொது நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் முதற்கட்டமாக 50 குடும்பங்கள் இந்த வார இறுதிப்பகுதியில் இளவாலையில் குடியமர்த்தப்படவுள்ளதாகவும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் எமது நிருபரிடம் தெரிவித்தார். (உ-43)

## ஐஸ் தொழிலகம் திறப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினால் பருத்துறை நகரப்பகுதியில் அமைக்கப் பட்ட ஐஸ் தொழிலக்ம் உத்தியோக பூர்வமாக இன்று மு.ப 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.(உ-43)

## பெற்றோர் கட்டிக்காத்த பெருமையை ஐ.தே.முன்னணி அரசு சீரழித்து வருகிறது

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முன்எப்போதும் இல்லாதவாறு நாட்டின் புகழையும் கௌரவத்தையும் அழித்துக் கொண்டுவருகிறது.

எனது பெற்றோர் நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்த சர்வதேச புகழையும் தரத்தையும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் மழுங்கடித்து இலங்கை நாட்டை உலக அளவில் செல்லாக் காசாக்கி வருகிறது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் சபாநாயகரும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரா பண்டார நாயக்கா.

அண்மையில் நடைபெற்ற "கல்வி மூலம் நட்பினை உருவாக்குவது" என்ற அமைப்பின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அனுரா இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்;

ஐக்கிய தேசிய கட்சி பின்பற்றும் ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடுகளை வெளிநாட்டு தலைவர்கள் பலரும் எதிர்த்து வருகின்றனர்.

மேலும் இலங்கையிலுள்ள அனைத்து மக்களும் ஐக்கிய தேசிய முன்னணியரசின் நடவடிக்கைகளை எதிர்த்து வருகின்றனர்.

இந்த எதிர்ப்பானது மேலும் நீடிக்கப்போகிறது. எமது நாடு 2000 வருடங்களுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டது.உலகையே வியக்க வைக்கும் விசேட படைப்புக்கள் வளங்கள் எல்லாம் இங்குள்ளன கடல்கள், குளங்கள்,பௌத்த சின்னங்கள், மணிகள் ஆறுகள், வனங்கள் சிகிரியா போன்ற வரலாற்றுப் பின்னணி வாய்ந்த இடங்கள் என்பன எமது நாட்டிற்கு பெரும் புகழையும் மதிப்பையும் தேடித்தந்தன.

அத்துடன் சிறந்த கைத்தொழில் வளங்களும் உள்ளன எனவே எமது முன்னேற்றத்திற்கு நாமே வித்திட்டுக்கொள்ள வேண்டும். அதற்கு முயற்சியும் உழைப்பும் வேண்டும். உலகில் எந்தவொருநாடும் தனது வரலாறு, இலக்கியம், கலாசாரம் என்பவற்றை மறந்து அபிவிருத்தி அடையவில்லை. தமது நாட்டுக்கும் இனத்துக்கும் அன்பு செலுத்தாதவர்கள் நீண்டகாலம் நிலைக்க மாட்டார்கள்.

அந்த வகையில் தற்போதைய அரசின் நோக்கம் வரலாற்றினை மறந்து விட்டு நாம் ஒன்றுமில்லாத இனம் என்பதை காட்டுவதாகும்.

இதனால் கலாசாரங்கள் மாறி அராஜகத்துக்கு நாடு செல்லும் வாய்ப்புண்டு.

அத்துடன் ஐ.தே.க அரசு 45 ஆயிரம் கோடி ரூபாவை கடனாகப் பெற்றுள்ளது. இது எமது நாட்டின் மீது கடன் சுமையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

இலங்கைப் பொருளாதாரம் வளர்ச்சி குன்றிய நிலையில் இருப்பதால் இந்த அரசு எவ்வாறு இந்தக் கடனை மீளச் செலுத்தப்போகிறது என்பது தான் கேள்விக்குறிக்குள்ளாகியிருக்கிறது.

எனவே நாங்கள் எங்கள் உயிர் உள்ளவரை இவ்வாறு எமது நாடு சீரழிவதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இந்நில்ல மாற நாம் புதுயுகம் ஒன்றை படைக்க வேண்டும் என்றார். (உ-10)




இருபாலை மக்கள் நலன்காக்கும் பிரிவில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் அமைப்பின் உபதலைவர் எஸ். அழகானந்தம் உரையாற்றுவதையும் முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், கோப்பாய் தெற்கு கிராம சேவையாளர். எஸ்.தயாபரன் மற்றும் உறுப்பினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## ஜிம்னாஸ்ரிக் அணி

(யாழபபாணம)

யாழ். பல்கலைக்கழக ஜிம்னாஸ்ரிக் அணி மாணவர்களால் நடத்தப்படும் ஜிம்னாஸ்ரிக் காட்சி இன்று பி.ப 3.00 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதியரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் துணைவேந்தர் பேராசியர் சு.மோகனதாஸ் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

ஆர்வலர்கள் எவரும் இதற்கு சமுகமளிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## மட்டு படைமுகாம்கள் பலப்படுத்தப்படுகின்றன.


(கொழும்பு)

வாழைச்சேனைக்கு அருகில் உள்ள நாவலடிச் சந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ள இராணுவமுகாம் விஸ்தரிக்கப்பட்டு நிரந்தர படைத்தளமாக மாற்றப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1990ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இப்படைமுகாம் தற்போது விஸ்தரிக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டுவருவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு கல்லடி இராணுவமுகாம் விஸ்தரிக்கப்பட்டுபலப்படுத்தப்பட்டு வருகின்றமைஇங்கு குறிப்பிடத்தக்கவை. (உ-10)





மாவடி ஸ்ரீஞானவைரவர் திருவுலாக் காட்சிகள்.

# நாட்டு மக்களனைவரும் திருப்திப்படும் விதத்தில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது அவசியம்

## புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் பாயிஸ் வலியுறுத்து

(கொழும்பு)

**அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் இந்நாட்டு மக்கள் அனைவரையும் திருப்திப்படுத்தக்கூடிய வகையில் அமைய வேண்டும்.**

**அத்துடன், அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மீண்டும் பேச்சுவார்த்தையினை ஆரம்பித்து அதில் வெற்றி பெற அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்.**

இவ்வாறு புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவரும் முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் அதியுயர் உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஏ.எம்.பாயிஸ் கொழும்புப் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளிற்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் மந்தகதியில் சென்று கொண்டிருப்பது மக்களுக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் அளித்துள்ளது.

இரு தரப்பினரும் விட்டுக் கொடுப்புடன் நடந்து கொண்டாலேயே சமாதானத்தை விரைவில் எட்ட முடியும். அத்துடன் பேச்சு வார்த்தையின் போது அரசும் விடுதலைப் புலிகளும் உடன்படும் விடயங்களை எதுவித தாமதமுமின்றி அமுல்படுத்த வேண்டும்.

அவ்வாறானால் தான் பேச்சுவார்த்தையும் முன்னேற்றப் பாதையில் செல்லும்.

அதேசமயம் இச்சமாதான முன்னெடுப்புக்களின்போது இலங்கை வாழ் சகல இன மக்களும் தமது உரிமைகளையும் நலன்களையும் சமமாகவும் கௌரவமாகவும் அனுபவிக்க உரித்துடையவர்கள் என்ற விடயத்தையும் ஒவ்வொரு இன சமூக மக்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டும்.

அவ்வாறு மறு இனத்தின் தனித்துவத்தை மதித்து நடந்து கொள்ள வேண்டுமாயின் பேச்சுவார்த்தை வெற்றிபெற்று நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும்.

இதேவேளை, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு, வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பரவலாக்கல் தீர்வொன்றை வழங்குவதன் மூலம் தீர்வு காணலாம் என நம்பப்படுகிறது. இதற்கு அரசும்-புலிகளும் இணங்கியுள்ளனர்.

இதனை முஸ்லிம் மக்களும் வரவேற்கின்றார்கள். ஆனால், இத்தீர்வில் அவர்களின் முக்கிய எதிர்பார்ப்பு என்னவென்றால், வடக்கு -கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அதிகார அலகு அமைய வேண்டும் என்பதாகும்.



20 வருட காலமாக நடைபெற்ற யுத்தத்தில் தமிழ் மக்கள் மட்டுமன்றி முஸ்லிம்களும் பாதிப்படைந்துள்ளார்கள். இதனால் அவர்கள் மீண்டும் ஓர் யுத்தத்தை விரும்ப மாட்டார்கள்.

அதற்குப் பதிலாக அவர்கள் நிரந்தர சமாதானம் ஏற்பட்டு மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பி நிம்மதியாக வாழ வேண்டுமென்றே விரும்புகின்றார்கள்.

அதற்கமைய யுத்தத்தினால் பாதிப்படைந்த பிரதேசங்களைப் புனரமைத்து மக்களைத் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் வெற்றிகரமாகவும் பாரபட்சமின்றியதாகவும் முன்னெடுத்துச் செல்வதற்கு புனர்வாழ்வு அதிகார சபை பூரண ஒத்துழைப்பு வழங்கும் என்றார். (உ-10)

## குடாநாட்டவர் 4 லட்சம் பேர் வெளிநாட்டில் வாழ்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டைச் சேர்ந்த 4 லட்சத்திற்கு மேற்பட்டோர் வெளிநாடுகளில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர் என யாழ். செயலக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற இனப்பிரச்சினை காரணமாக அகதிகள் என நாட்டை விட்டு வெளியேறிய தமிழர்களில் பெரும்பாலானோர் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி 17 மாத காலமாகியும் இன்னும் நாடு திரும்பவில்லை.

அங்கு அவர்கள் தங்கள் வசதிக்கு ஏற்ப தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளமையே இதற்குக் காரணம் என்றும், அவர்கள் மீண்டும் வரவேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறப்படுகின்றது. (பி-4)

## மாரப்பனவின் இஸ்ரேல் விஜயத்திற்கு இஸ்லாமிய அமைப்புகள் கண்டனம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இஸ்ரேல் நாட்டுக்குச் சென்று ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டுள்ளமைக்கு அரபு உலக இஸ்லாமிய அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.



சியோனிஸ்ரிகனின் நிலப்பரப்புகளுக்குள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன சென்றிருப்பதனாலேயே அரபு உலக இஸ்லாமிய அமைப்புக்கள் இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வேகப்படகுகளை தாக்கியழிக்கும் வகையில் பெருமளவு ஆயுதங்களைக் கொள்வனவு செய்தவதற்காகவே இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேலிற்கு வந்துள்ளதாகக் குறிப்பிட்ட இஸ்லாமிய அமைப்புக்கள், இவரது திடீர் விஜயம் குறித்துத் தாம் அதிருப்தி அடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி ஆகியோரின் இஸ்ரேலிற்கான விஜயம் பற்றி ஆறு மாதங்களுக்கு முன்னரே இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்ததாக இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலகம் அறிக்கை வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

### குருவாக திருநிலை

(கொழும்புத்துறை)

அமிர்தநாதர் கிளமெனற் இன்பநாதன், இன்று மு.ப. 10 மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில், யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் குருவாக திருநிலைப் படுத்தப்படவுள்ளார். (உ-51)

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழர் கூட்டமைப்பு யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் கலந்துகொள்ளும் கருத்தரங்கு ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோயிலடி ஞான வைரவர் ஆலய முன்றலில் இன்று புதன்கிழமை பி.ப. 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (உ)

### தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடாத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பி.ப. 4.30 மணிக்கு கட்டுடை விநாயகர் மைதானத்தில் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகமும், சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகமும் பங்குபற்றவுள்ளன. (உ-10)

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் 50வது ஆண்டுப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் க.சிறீராஜன் தலைமையில் நடைபெற

St.JOHN'S COLLEGE
JAFFNA

ANNUAL PRIZE GIVING
2003
Saturday 19th July 2003
at 10.00 a.m

CHIEF GUEST
Rt Rev. Kumara Bandara Samuel Illangasinghe
Bishop of kurunagala
&
Dr.(Mrs)Lakmini Priyakanthi Illangasinghe

CHAIRMAN
Ven S.P.Nesakumar
Archdeacon of Jaffna

Parents, Old Boys & Well - wishers are cordially invited.

Principal,
Staff & Students

[C/6409]

பத்திரிகைத்துறை
சில நினைவுக் குறிப்புகள்

பத்திரிகைத்துறை ஆர்வலர்கள் அவசியம் வாசிக்கவேண்டிய நூல்
ஆசிரியர் : எஸ்.பெருமாள் (முன்னாள் ஈழநாடு ஆசிரியர்)
விலை : ரூ. 150.00
165, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்.
(C/6414)

தரம் 11 மாணவர்களுக்கான
கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டிப் பரிசில்கள்.
1ஆம் பரிசு ரூபா 750/=
2ஆம் பரிசு ரூபா 500/=
3ஆம் பரிசு ரூபா 250/=
மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஈழத்து எழுத்தாளர்
அமரர் கணபதி கணேசன் ஞாபகார்த்தமாக
(செம்பருத்தி பப்ளிகேஷன்ஸ் மலேசியா)
கட்டுரையின் தலைப்பு
கல்வித்துறையில் கணியின் பங்கு

போட்டியின் விதிகள்:
தரம் பதினொன்றில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
* கட்டுரை 200தொடக்கம் 250சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப்பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.07.2003ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

இணைக்கும் பத்திரம்
கட்டுரைப்போட்டி இல-6

மாணவர் பெயர்: ..............................
பாடசாலை முகவரி: ..............................
..............................
கற்கும் தரம்: ..............................
உறுதிப்படுத்துகிறேன்
..............................
ஆசிரியர்.

## இன்னும் ஒரு தகவல்

# சாலைப் பாதுகாப்பு

எனக்குத் தெரிந்த ஒருவர் ஸ்கூட்டர் வைத்திருக்கின்றார். அவர் ஒவ்வொரு நாளும் அதனை எடுத்துக்கொண்டு வெளியில் போகும் பொழுது ஒரு தேசிக்காயை எடுத்து சக்கரத்தின் அடியில் வைத்து காவு கொடுத்து விட்டுத்தான் புறப்படுவார். அப்படி ஓர் நம்பிக்கை. '' ஏன் சார் இப்படிச் செய்கின்றீர்கள்?'' ஏன்று அவரிடம் கேட்டேன். என்ன சார் விபரம் தெரியாத ஆளாக இருக்கின்றீர்கள் இந்தக் காலத்தில் ஒரு வாகனத்தை எடுத்துக்கொண்டு வெளியில் வெளிக்கிட்டால் திரும்பி வரும் வரை விபத்து எதுவும் இல்லாமல் வந்து சேர வேண்டுமே அதற்காகத்தான் இப்படி என்று கூறிவிட்டு தலைக் கவசத்தை எடுத்துத் தலையில் கவிழ்த்துக்கொண்டு போய் விட்டார்.

அவர் அப்படி நினைப்பதில் தவறில்லை. நாகரிகம் வளர்ந்து கொண்டிருக்கின்றது போக்கு வரத்தும் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. அதே வேகத்தில் தெருக்களின் அகலமும் வசதிகளும் அதிகரித்துக்கொண்டா இருக்கின்றது? இல்லையே! பத்துப் பேர் நடந்து போகும் தெருவில் நூறு பேர் நடந்தால் இடித்துக்கொண்டு மன்னிப்புக் கேட்டுத்தான் போக வேண்டியிருக்கும். வேறு வழியில்லை.

இதேவேகத்தில் போய்க் கொண்டிருந்தால் இனி நடந்து செல்பவர்களும் தலைக்கவசம் போடவேண்டும் என்ற சட்டம் வந்தாலும் வரும். அவர்களும் தினம் ஒரு தேசிக்காயை மிதித்து விட்டு வெளியில் வெளிக்கிடும் நிலை வந்து விடும். சாலை வசதி அதிகரிக்க வேண்டும். சனத்தொகை குறையவேண்டும். தேவையற்ற பிரயாணங்களைக் குறைக்க வேண்டும்.

இவை யாவும் ஒரு பக்கம் இருந்தாலும் கூட இப்பொழுதுள்ள நிலைமையில் நாம் முக்கியமாகச் செய்யவேண்டியது, ''சாலை விதிகளை அனுசரித்து நடத்தலே'' முக்கியமாக வாகனம் செலுத்துபவர்கள் சில பாதுகாப்பு முறைகளை மனதில் வைத்துக் கொண்டால் எத்தனையோ விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இந்த விடயத்தில் நிறைய அனுபவப்பட்ட சில குறிப்புக்களை கொடுத்திருக்கின்றார். இவற்றை வாகனம் செலுத்துபவர்கள் மனதில் வைத்துக்கொள்வது நல்லது. கூறுபவை சாதாரண விடயங்களாகத் தெரியலாம். ஆனால் முக்கியமான குறிப்புக்கள், 10 குறிப்புக்களை அவர் கூறியிருக்கின்றார். முதலாவது வாகனம் செலுத்துகின்ற ஒவ்வொருவரும் மற்றைய வாகனஓட்டிகளுக்கு போக்குவரத்து விதிகள் எதுவும் தெரியாது. ஆகவே, நான் தான் கவனமாகச்செல்லவேண்டும் என மனதில் நினைத்துக்கொள்ள வேண்டும். இரண்டாவது, கார்செலுத்துபவர்கள் எப்பொழுதும் இரண்டு கைகளையும் ஸ்ரியறிங்வீல் மீது வைத்துக்கொண்டு செலுத்தவேண்டும். சிலர் வலது கையை ஸ்ரைலாகக் கதவின் மீது வைத்துக்கொண்டு செல்வார்கள். திடீரென்று குறுக்கே ஏதாவது வாகனம் வந்து விட்டால் வாகனத்தை திருப்புவதற்கு போதுமான பலம் இல்லாதுபோய்விடும்.

மூன்றாவது , எதிர் திசையில் பார்வையை மறைக்கக் கூடியவாறு பெரிய வாகனங்கள் நின்று கொண்டிருந்தால் அவற்றைக் கடந்து செல்வதற்கு முதல் ஹோர்ன் அடித்து விட்டுக் கவனமாக மெதுவாகச் செல்லவேண்டும். நான்காவது , பகலில் இன்டிக்கேட்டரைப் போடக்கூடாது.

ஐந்தாவது, சந்திகளில் திரும்பும் போது சிக்னல் காட்டியபோதும் கூட பின்னால் ஏதாவது வாகனம் வருகின்றதா என்றுபார்த்துக் கொள்ளுங்கள். ஆறாவது, வேகமாகச்செல்லும் போது திடீரென்று பிறேக்போடவேண்டாம். ஏழாவது, தெருவில் ஆடு, மாடு நிற்கும்போது அருகில் போய் ஹோர்ன் அடிக்கக்கூடாது அவைமிரண்டு போய் வாகனத்தின் மீது விழுந்து விடும்.

எட்டாவது, இன்னோர் வாகனத்தை கடக்கும்போது உரசிக் கொண்டுபோவது போல் செல்லக்கூடாது. தாராளமான இடைவெளி இருக்கவேண்டும். ஒன்பதாவது, எதிரெதிராக இரன்டு வாகனங்கள் கடக்கும் பொழுது வேகத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

பத்தாவது, இரவில் செல்லும்போது எதிரில் வருபவர் வெளிச்சத்தைக் குறைத்துக்கொண்டு போகட்டும் என்று பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. நாம் குறைத்து அவரது வாகனம் கடந்து சென்ற பின் வெளிச்சத்தைக்கூட்டலாம். இவற்றுக்கெல்லாம் மேலாக வாகனத்தை சரியான கண்டிஷனில் வைத்திருக்க வேண்டும். வாகனம் செலுத்துபவரும் சரியான கண்டிஷனில் இருக்கவேண்டும்.

ஒரு கல்யாண கோஷ்டியை அழைத்துச் செல்ல வாகனம்தயார். சாரதி வரவில்லை. அங்குஇருந்த ஒருவர் எனக்குப் பஸ்ஓடத் தெரியும் நான் பஸ்ஓடுகிறேன் என்றார். எல்லோரும் ஏறி அமர்ந்தார்கள். இவரும் மெதுவாக அவர்களை உரிய இடத்தில் சேர்த்து விட்டார். எல்லோரும் இறங்கிய பின்பு ஒருவர் வந்து ''ரொம்ப நன்றி! எங்களை கவனமாகக்கொண்டு வந்து சேர்த்து விட்டீர்கள் அது சரி வரும் வழியெல்லாம்காலுக்கு அடியில் குனிந்து எதையோ தேடினீர்களே?'' என்றார். அதற்கு இவர் ''ஆமாம்பிறேக் எது என்று தேடினேன் கடைசி வரை கண்டுபடிக்கவே முடியவில்லை. பரவாயில்லை அது தான் நிம்மதியாக வந்து சேர்ந்து விட்டோமே'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர்
# பன்னிரு படைவீரர்கள் மரணம்

(கொழும்பு)

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தடப்பட்டதைத் தொடர்ந்து, மரணமடையும் ஆயுதப்படையினரின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துள்ளது.

கடந்த 18 மாதங்களில் 12 படையினரின் மரணங்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. அதற்கு முந்தைய 6வருடகால போரில் முப்படைகளையும் சேர்ந்த 10ஆயிரம் பேர் இறந்துள்ளனர்.

கடந்த வாரம் பாராளுமன்றில் நடைபெற்ற நாட்டின் பாதுகாப்பு நிலவரம் தொடர்பான விவாதத்தின் போது மேற்படி புள்ளி விபரங்கள் வெளியிடப்பட்டன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது நான்கு இராணுவச் சிப்பாய்களும், 8 இராணுவப புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களும் 11 சிவிலியன்களும் சமாதான ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

1995ஆம்ஆண்டு தொடக்கம் 2001ஆம்ஆண்டு வரையான காலப்பகுதில்978 இராணுவ சிப்பாய்களும், 236 கடற்படையினரும், 183 விமானப்படையினரும், கொல்லப்பட்டுள்ளனர். 28ஆயிரம் பேர் அங்கவீனர்களாகியுள்ளானர். 3ஆயிரம் போ காணாமல் போயுள்ளனர் என்றும் இவ்வவாதத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ)

# சித்தமருத்துவத் துறையை நிறுவனமாக்குவதற்கு
# பல்கலை மாணவர் ஒன்றியம் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையை நிறுவனமாக்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடும்ஆட்சேபத்தை தெரிவித்துக்கொள்கின்றது. அதேவேளை, சித்த மருத்துவத்துறையை தனிப் பீடமாக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி அம்மாணவர்கள் மேற்கொள்ளும் நியாயமான கோரிக்கைக்கு எமது பூரண ஆதரவை தெரிவிக்கின்றோம்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்,

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்கள் சென்ற 08.07.2003 இல் இருந்து, தமது துறையை நிறுவனமாக்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளிற்கு எதிர்ப்புத்தெரிவித்து பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழர்களின் சுதேச வைத்தியமான சித்த மருத்துவத்தை வளர்ப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இத்துறை மேன் மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என்பதே எம்மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இத்துறையில் கல்வி கற்கும் மாணவர்கள் பல தடவைகள் சித்த மருத்துவத்துறையை தனிப்பீடமாக ஆக்கித் தருமாறு கோரிய போதும் அக்கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. தற்போது அத்துறையை தனிப் பீடமாக்குவதைத் தவிர்த்து அதனை பல்கலைக்கழக நிர்வாகத்திலிருந்து தனிமைப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்துறை நிறுவனமாக்கப்பட்டால் அதன தரம் குன்றிவிடும் என மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

பல்கலைக்கழக நிர்வாகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டால் விளையாட்டு, நாடகம், நூலகம் போன்றவற்றில் முழுமையாக பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்பட முடியாதுபோகும்.

சித்த மருத்துவத்துறையை தனியொரு பீடமாக்கினால் அது ஏனைய பீடங்கள் போன்று வளர்ச்சி பெற்று விடும். இதன் மூலம் எம்மக்களின் சுதேச வைத்திய துறையை கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் சுதேச வைத்தியத் துறை வளர்ச்சி பெற்று விடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## இராசி பலன்

**16.07. 2003**

(ஆனி 32, புதன்)

திருதியை- மு.இ. 8.53வரை
அவிட்டம் பி.இ. 12.43வரை
இராகுகாலம்- 12.00-1.30
சுபநேரம்- 4.30-6.00

**மேடம்**
நினைத்த காரியம் கைகூடும், வருமான அதிகரிப்பு, மனமகிழ்ச்சி, சிநேகிதர் வரவு.

**இடபம்**
நன்கொடை, பெரியோரால் மதிக்கப்படுதல், எடுத்தகாரியம் கைகூடும், அதிகாரம்.

**மிதுனம்**
எதிர்பாராத செலவு, தேசாந்திரவாசம், சீரப்பிரயாசை, மனப்பயம்.

**கடகம்**
அஜீரணக்கோளாறு, வீண்தொல்லை, பொருள் விரயம், முயற்சி தாமதம்.

**சிங்கம்**
செய்தொழில் நன்மை, நல்ல காரியம், அபுர்வ சந்திப்பு, போசன சுகம்.

**கன்னி**
ஆரோக்கியம், சத்துருஜெயம், செய்தொழில் முன்னேற்றம், புதிய மாற்றம்.

**துலாம்**
அஜீரண ரோகம், காரியதாமதம், தாழ்ந்த சுபவம், சொத்துப் பிணக்கு.

**விருச்சிகம்**
தன்னம்பிக்கைக்குறைவு, உடல் நலக குறைவு, காரியதாமதம், வீண் பகை.

**தனுசு**
கூட்டுமுயற்சி, சுவாரஸ்யம், நற்கீர்த்தி, பொருள் சேர்க்கை.

**மகரம்**
அதிக செலவு, விவாதம், எந்தக்காரியத்திலும் தாமதம், கௌரவக்குறைவு.

**கும்பம்**
தெய்வ சிந்தை, வெகுமானம் விருந்து பசாரம், காரிய சித்தி.

**மீனம்**
உணர்ச்சிவசப்படல், சுபகாரியச்செலவு, வேலையில் ஆர்வம், சோபம்பல் நிலை

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# பாய்கட்டத் தவறின்
# பாஸ் பறிமுதல் செய்யப்படும்
## படையினர் அறிவிப்பு

(கொழும்புத்துறை)

குருநகர் மீனவர்கள் வெள்ளை நிறப்பாயும், பாசையூர் மீனவர்கள் நீல நிறப் பாயும், கொழும்புத்துறை மீனவர்கள் சிவப்பு நிறப்பாயும்தொழிலுக்குக்கொண்டு செல்லுதல் வேண்டும்.

தவறினால், இம்மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தொழில் அனுமதிப்பத்திரம் பறிமுதலாகும் என்று படையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந் நடைமுறை முன்னர் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததாயினும், அரசு-புலிகளிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்ஏற்பட்ட பின்னர் கைவிடப்பட்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மீனவர்கள் மீதான உடற்பரிசோதனையை படையினர் தீவிரப்படுத்தியிருப்பதுடன் கடலோரங்களில் புதிய, புதிய காவல் அரண்களை அமைத்து வருவதும் தெரிந்ததே. (உ-51)

# வல்லிபுர ஆலய அனுசரணையுடன்
# கணனிப் பயிற்சி நிலையம் திறப்பு

(பருத்தித்துறை)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயமும் இந்து கலாசார அமைச்சும் இணைந்து புலோலியில் கணனி பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

யூனிவேசல் கணனி நிலையம் எனப்பெயர் சூட்டப்பட்டுள்ள இக் கணனி நிலையத்திறப்பு விழா ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய அறங்காவல் சபைத்தலைவர் எஸ்.அன்னலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் ரீ.மகேஸ்வரன் கணனிப் பயிற்சி நிலையத்தை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார்.

இத்திறப்பு விழாவிலே நிக்கொட் நிறுவன திட்ட இணைப்பாளர் ஆர்.இலங்காநேசன், யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம், வலயக்கல்விப் பணிப்பாளர் எம். வேணுகோபால், பருத்தித்துறை பிரதேச செயலர் சிவசுவாமி, வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி கே.மயில்ஏறும்பெருமாள் உட்பட இன்னும் பலர் இவ்விழாவிலே கலந்து கொண்டனர்.

இப்பயிற்சி நிலையத்திற்கு 10 கணனிகள் வந்து சேர்ந்துள்ளன. மேலும் 15 கணனிகள் வந்து சேரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-52)

# 12வது எதிரியும் பிணையில் செல்ல நீதவான் அனுமதி

(கொழும்பு)

உடத்தலவின்ன படுகொலை வழக்கு விசாரணை நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடை பெற்ற போது, 12 எதிரிக்கு பிணை வழங்கப்பட்டது. 12வது எதிரியான மஹிந்த திஸநாயக்கவுக்கு 2இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் இருவரின் சரீரப்பிணையிலும் அவர் செல்ல அனுமதியளிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசாரணையின் போது அப்துல் அசீஸ் பிரதாவுஸ் என்பவரின் உடலைப்பரிசோதனை செய்த சட்ட வைத்தியநிபுணர் சாட்சியமளித்தார். அவர் தமது சாட்சியத்தின் போது பிரதாவுஸ்ஸின் உடலில் எட்டுக் காயங்கள் காணப்பட்டதாகவும் அவை அத்தனையும் மரணத்தை விளைவிக்கக்கூடிய காயங்கள் அல்லவெனவும்தெரிவித்தார்.

2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5ஆம்திகதி உடத்தலவின்ன என்ற இத்தில் இடம் பெற்ற மனிதப் படுகொலைச் சம்பவத்தில் உயிர் தப்பியவர் அப்துல் அஸீஸ் பிரதாவுஸ் என்பது குறிப்பிடத்தக்கது. வழக்கு விசாரணையின் போது சாட்சியமளித்த முக்கிய சாட்சிகளில் இவர் ஒருவர்.


முகமட் சிபான் என்பவரின் உடலையும் பரிசோதனை செய்த சட்டவைத்திய நிபுணர் அசோக பண்டார செனவிரட்ண சிபானின் உடலில் 7 காயங்கள் இருந்தனவென்றும் 4காயங்கள் நெருப்பு மூலம் ஏற்பட்டதென்றும் தெரிவித்தார். (இ)

# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்

வினா இல. : 25 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**❈ A,B,C இனை DEFஉடன் தொடர்புபடுத்தினால் சரியாக அமையும் விடையின் கீழ்க் கோடிடுக.**



01. D. குடம்பி / E. வாற்பேய் / F. கூட்டுப்புழு
1. A - E: B - F: C-D
2. A - D: B - E: C-F
3. A - F: B - D: C-E

02. D. மாமிச உண்ணி / E. தாவர உண்ணி / F. அனைத்தும் உண்ணி
1. A - D : B - F : C - E
2. A - E : B - D : C - F
3. A- E : B - F : C - D

03. D. Hospital / E. School / F. Temple
1. A - D : B - F : C - E
2. A - F : B - D : C - E
3. A - E : B - F : C - D

04. D. Head / E. Foot / F. Body
1. A - E : B -D: C- F
2. A - E : B -F: E- D
3. A - F : B -D: C -D

**❈ மிகவும் சரியான விடையினைத் தெரிவு செய்க**

05.T.P - 021 - 2184என்பதில் உள்ள T.P என்பதன் பொருள் என்ன?
1. தொலைக்காட்சி 2. தொலைநோக்கி 3. தொலைபேசி

06.T.V - National black and White என்பதில் உள்ள T.V என்பதன் பொருள்
1.தொலைக்காட்டி 2. தொலைபேசி 3. தொலைக்காட்சி

07.Today 4.00p.m என்பதில் உள்ள p.m என்பது குறிப்பது
1.முற்பகல் 2. பிற்பகல் 3. நள்ளிரவு

08. OPEN: 8.00a.m -5.00 p.m என்பதில் உள்ள Open என்பதன் பொருள்
1. திறந்துள்ளது 2. மூடப்பட்டுள்ளது 3. கடமை நேரம்

09.Mr.R.Raguraman Out என்பதில் உள்ள OUT என்பதன் பொருள்
1.உள்ளே 2. வெளியே 3. சந்திக்கமுடியாது

10.EXIT என எழுதப்பட்டுள்ள அறிவித்தல் பலகையின் பொருள்
1. வெளியேறும் பாதை 2. உள்வரும் பாதை 3. கழிவகற்றும் இடம்

| |
|---|
| A + B + C = 62 |
| B + C = A |
| C + 11 = 16 |

**இவ்வட்டவணையைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களிற்கு விடை தருக.**

11. A யினுடைய பெறுமானத்திற்கு சரியானது?
1. $\frac{62}{2}$ 2. 62 x 2 3. 62+2

12.Cயினுடைய பெறுமானத்திற்கு சரியானது?
1. 16 + 11 2. 16 - 11 3. $\frac{16}{11}$

13.Bயினுடைய பெறுமானத்திற்குச் சரியானது?
1. 31 2. 26 3. 5

14.AxBxC யினுடைய பெறுமானத்திற்கு சரியானது?
1. 31 + 26 + 5 2. 31 x 26 x 5 3. 31- 26 -5

15. $\frac{B+C}{A}$ என்பதன் பெறுமதி என்னவாக இருக்கும்?
1. 0 2. 1 3. 2

**❈ கீழ்வரும் ஒவ்வொரு வினாவிலும் தரப்படும் தரவுகளுக்கு அமைய பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

16.1G,2O,1D என்பது GOOD எனவும் 1O,2F,1I,1C,1E என்பது OFFICE எனவும் அமையின் 1A,2D,1R,1E,2S என்பது எவ்வாறு அமையும்?
1.ADDREESS 2.ADRES 3. ADDRESS 4. AADDRREESS


17.தமிழில் மிகவும் குறைந்த எழுத்துக்களால் ஆக்கப்பட்ட ஒரு மாதத்தின் பெயரையும் ஒரு உறுப்பின் பெயரையும் முறையே ஆங்கிலத்தில் கொண்ட விடை?
1.February, eye 2. Hand,January 3.January, Hand 4. January,ear


18.மூன்று கோணமுள்ள உருவை முக்கோணி என்றும் ஐந்து கோணமுள்ள உருவை ஐங்கோணி என்றும் அழைப்பின் 10கோணமுள்ள உருவை எவ்வாறு அழைக்கலாம்?
1.பதுகோணி 2. தசகோணி 3. நவகோணி 4. எண்கோணி


19.ஒலியலைகளை மட்டும் கொண்டுள்ளது வானொலியில் பாடல். ஒளியலைகளை மட்டும் கொண்டுள்ளது ஊமைப்படம். எனின் ஒளி, ஒலி அலைகள் இரண்டையும் கொண்டமைந்தது?
1.தொலைபேசி - உரையாடல் 2. தொலைக்காட்சி - நாடகம்
3.தொலைநோக்கி - வயல்காட்சி 4. மேளக்கூட்டு - கச்சேரி


20.எரியக்கூடிய பொருட்கள எரிபொருட்கள் எனப்படும். ஒளியைத் தரக்கூடிய பொருள் ஒளிர்பொருள் எனப்படும். கீழ்வருவனவற்றில் எரிபொருளாகவும் - ஒளிர்பொருளாகவும் அமைவது
1.சூரியன் 2. மின்குமிழ் 3. மெழுகுதிரி 4. குங்கிலியம்


**❈ 21 - 25 வரையான வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவை பிரிக்கும் போது எவ்வாறு அமையும் என தொடர்ந்து வரும் உருக்கள் காண்பிக்கின்றன. ஆனால் தரப்பட்ட உருக்களில் ஒன்று மட்டும் முதலாம் உருவில் இருந்து பெறப்பட்டிருக்கமாட்டாது. அவ்வுருவை தெரிவு செய்க.**

21.



22.


23.


24



25.


**❈ இவ்வுருவை நன்கு அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்க.**



26.இவ்வுருவில் இருந்து பெறத்தக்க 4 பக்கங்களையுடைய உருக்களின் எண்ணிக்கை யாது?
1. 3 2. 6 3. எதுவுமல்ல

27.மேலே உள்ள உருவில் இருந்து பெறத்தக்க மூன்று பக்கங்களையுடைய உருக்களின் எண்ணிக்கை எத்தனை?
1. 4 2. 5 3. 6



28.அருகே காட்டப்பட்டுள்ள உருவை ஆக்கப் பயன்பட்டுள்ள வடிங்களின் எண்ணிக்கையை சரியாக குறிப்பிடும் விடை

| | ① | ② | ③ |
|---|---|---|---|
| முக்கோணம் | 3 | 3 | 3 |
| சதுரம் | 1 | 2 | 1 |
| செவ்வகம் | 1 | 2 | 1 |
| வட்டம் | 2 | 3 | 3 |

29. 42,03,61,26,40ஆகிய எண்களை ஏறுவரிசையில் எழுதும்போது நடுவில் அமையும் எண்
1. 03 2. 26 3. 61 4. 40

30. 42 302 இல் 3இன் பெறுமானம்
1.3ஆகும் 2. 3000ஆகும் 3. 300ஆகும் 4. 30ஆகும்.

**❈ கீழ்வரும் எண்கள் ஒரு கொலத்திற்கு அமைய எழுதப்பட்டள்ளன. ஆனால் சில இடங்களில் ஒழுங்கு மாறி பிழையாக எழுதப்பட்டுள்ளது. அந்த இடத்திலுள்ள எண்ணின் மீது புள்ளடி இடுக.**

31

| | | | | |
|---|---|---|---|---|
| 101 | 102 | 103 | 104 | 105 |
| 110 | 109 | 108 | 107 | 106 |
| 111 | 112 | 113 | 114 | 115 |
| 120 | 119 | 18 | 117 | 116 |
| 121 | 122 | 123 | 124 | 125 |


32

| | | | | |
|---|---|---|---|---|
| ABC | DEF | GHI | JKL | MNO |
| PQR | STU | VWX | YZA | BCD |
| EFG | GHI | JKL | MNO | PQR |
| STU | VWX | YZA | BCD | EFG |
| HIJ | KLM | NOP | QRS | TUV |

33

| | | | | |
|---|---|---|---|---|
| 123 | 123 | 123 | 123 | 123 |
| 123 | 123 | 123 | 123 | 123 |
| 123 | 123 | 123 | 123 | 123 |
| 123 | 123 | 123 | 123 | 123 |
| 123 | 123 | 123 | 123 | 123 |

**❈ கீழே தரப்பட்டுள்ளது சந்திரனின் பல்வேறு நிலைகளாகும்.**




A B C D E F G

34.இதில் அமாவாசை தினத்தைக் குறிக்கும் எழுத்து
1. B 2. C 3. D 4 . G

35.அமாவாசை தினத்திற்குரிய திகதி
1. 08.06.2003 2. 16.06.2003 3. 24.06.2003 4. 16.07.2003

36.அட்டமி தினத்தில் சந்திரனின் தோற்றத்தை விளக்கும் உருவுக்குரிய எழுத்து
1. A 2. C 3. D 4. G

37.மேலே தரப்பட்டுள்ள நிலைகளில் எதனை நாம் வானில் அவதானிக்க முடியாது?
1. A 2. C 3. D 4. G

38.மேலே காட்டப்பட்டுள்ள ஒரு நிலை ஏற்படும்போது அரசு அன்று விடுமுறை விடும். அந்த நிலையைக் குறிக்கும் எழுத்து எது?
1. A 2. C 3. D 4. G

39.நிலை A இற்கும் நிலை Gஇற்கும் இடைப்பட்ட காலம் எத்தனை நாட்கள்
1. 8 2. 16 3. 24 4. 32

40.நிலை Gஏற்பட்டு மீண்டும் எத்தனை நாட்களின் பின் நிலை G மீண்டும் ஏற்படும்.
1. 8 2. 16 3. 24 4. 32

---

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 25

மாணவர் முழுப்பெயர்: ..............................

பாடசாலையின் பெயர்: ..............................

வீட்டின் முகவரி: ..............................

மாணவர்களே! உங்கள் விடைகளை 23.07.2003இற்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
15,வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: மாணவர்களின் நலன்கருதி இவ்வினாத்தாள்களை வைத்துக் கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாக குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல : 23

### அதிகூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர்கள்பெயர் விபரம் வருமாறு:

01. ந. சரண்யா- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
02. க. சுஜித்தா- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
03. க. பிரியந்தி- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
04 ஆ. அமலராஜ்- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
05 பு. டிலக்ஷன்- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
06. சு. அஜித்தா- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
07 சி. நிலக்ஷன்- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
08. செ. சுவேதரன்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம
09. அ. ராஜ்கரன்- கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரி
10. ம. மதுசன்- வட்டு மத்திய கல்லூரி
11. யோ. துஷிகன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
12. பே. கலையரசன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
13. இ. பிரசாத்- வதிரி திரு இருதயக்கல்லூரி
14. சி. அருண்குமார்- வதிரி திரு இருதயக்கல்லூரி
15. தா. அபிராமி- வதிரி-திரு இருதயக்கல்லூரி
16. செ. விமோசனன்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
17. ந. நிவாசன்- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
18. பி. ஜோதிகா- வல்வை சிவகுரு வித்தியாசாலை
19. த. தனுசியா- வல்வை விநாயகர் வித்தியாசாலை
20. செ. கலிஸ்ரா- நவாலி சென் பீற்றர்ஸ் றோ.க.த.க பாடசாலை
21. க. நீருஜா- வல்வை றோ.க.த.க பாடசாலை
22. ம. வித்தியா- வல்லை மகளிர் மகாவித்தியாலயம்
23. த. கபிலன்- யா/பரியோவான் கல்லூரி
24. பா. சரூபா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
25. அ. பிறேமி- உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
26. ச. தனேஷன்- திருநெல்வேலி.இ.த.க. பாடசாலை
27. கி. ஜனக்ஷன்- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
28. மு. பிருந்தா- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
29. ம. லங்கேசன்- நீர்வேலி சீ.சீ.த.க.பாடசாலை
30. ந. கஜீபன்- கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்
31. ச. சுவீபன்- சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை
32. இ. சௌமியா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.
33. க. தனுசீலன்- மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்.
34. ந. வினோரூபன்- உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
35. யோ. விதுஷ்ஷன்- உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
36. சி. கனிஷ்ஸா- உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
37. ப. சங்கீர்த்தனா- சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை
38. செ. சிவதர்சினி- சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை
39. எஸ். நிலக்ஷி- வதிரி திரு இருதயக்கல்லூரி
40. ச. சுவஸ்திகா- இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை
41. ச. சாகித்தியன்- கோப்பாய்- நாவலர் தமிழ் வித்தியாலயம்
42. ந. சஞ்சீவன்- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
43. ம. சிவறோசன்- வட்டு. யாழ்ப்பாண கல்லூரி
44. ர. மயூரி- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
45. இ. கோபிகிருஷ்ணன்- வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி
46. ஞா. தாரணி- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
47. ப. ஹரிதர்ஷன்- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
48. ச. ஜெயபாரதி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
49. ஸ்ரீ. நீரஜா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
50. பா. சந்திரா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
51. ச. கிரிசாந்- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
52. பி. யோபிதா- வல்வை சிவகுரு வித்தியாசாலை
53. இ. மதனிகா- வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
54. பி. நந்தினி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
55. இ. சுபாஷன் நீர்வேலி சீ.சீ.த.க. பாடசாலை
56. ப. பனோஜன்- நீர்வேலி சீ.சீ.த.க. பாடசாலை
57. க. லக்ஷனா- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
58. மா. றொஷாந்தி- ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம்
59. த. அருந்துஷா- கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி
60. க. யசோதரன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
61. மா. சர்மிளன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
62. ச. தியோஷன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
63. க. சிந்துஜன்- துன்னாலை மெ.மி.த.க.பாடசாலை
64. ஆ. சுகன்ராஜ்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
65. இ. இராஜப்பிரவிந்தன்- மானிப்பாய்சோதிவேம்படி வித்தியாலயம்.
66. ச. அபிநயா- யா/சுண்டுக்குளி மகளிர்கல்லூரி
67. க. தரிசினி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
68. இ. கஜன்ராஜ்- பூம்புகார் அ.த.க.பாட்சாலை
69. ப. சுதன்- உடுவில் மகளிர் கல்லூரி
70. சி. தயனி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
71. பா. அபிராமி- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
72. பி. நிரோஷன்- மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
73. சி. ஜெயக்குமார்- வல்வை அ.மி.த.க. பாடசாலை
74. வி. கல்யாணி- வல்வை றோ.க.த.க. பாடசாலை
75. சி. சிவராகவன்- மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
76. மே. நீதினி யா/ இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை
77. ஜெ. சிறிலவன்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
78. ச. அருண்- யா/இணுவில் மத்திய கல்லூரி
79. ம. சரண்யா- சுன்னாகம்திருஞானசம்பந்த வித்தியாசாலை
80. ப. கார்த்திகா- அச்சுவேலி மத்திய கல்லூரி
81. சி. மதுசன்- வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி
82. பா. கிருஸ்ரின்வேணி- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
83. கௌதமி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
84. சீ. சுஜீபனா- அச்சுவேலி மத்திய கல்லூரி
85. கு. சௌமிகா- அல்லாரை அ.த.வித்தியாலயம்
86. ஜெ. லக்ஷி- யா/சுண்டுக்குளி மகளிர்கல்லூரி
87. மு. நிரோஜா- அளவெட்டி அருணோதயக்கல்லூரி
88. த. பவிதா- ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை
89. த. தனுஜா- மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்
90. சி. சஸ்மிதா- ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை
91. செ. ஜனகன்- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
92. பெ. கோகிலன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
93. த. ருசிகா- இணுவில் மத்திய கல்லூரி
94. சா. மதுறமி- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
95. பா. கோகிலன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
96. தி. தசேந்திரன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
97. சு. மெர்ஜினி- யா/ புனித திரேசாள் மகளிர் கல்லூரி
98. சா. விஜிகலா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்.
99. கு. ஜெய்சினி- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
100. மா. நிறோஜி- இந்து ஆரம்ப பாடசாலை
101. ரா. துர்க்கா- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
102. உ. விதுசன்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
103. க. திவாகர்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
104. வி. சுபாசினி- சுதுமலை வடக்கு இ.த.க. வித்தியாலயம்
105. த. தர்சனா- உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
106. கு. சன்ஜீவன்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
107. சி. வினோதா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
108. சி பிருந்தினி- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாசாலை
109. வி. கஸ்தூரி- வல்வை றோ.க.த.க. பாடசாலை
110. ஜெ. கிரித்திகா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
111. த. சர்மிலன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
112. க. சகாதேவன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
113. ஜெ. கீர்த்தனா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
114. சு. அருளினி- உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
115. அ. கனிஷ்ரா- உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
116. இ. அனோஜிதா- உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
117. ச. அனுஷா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
118. க. அனுசியன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
119. ஞா. கார்த்திகா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்
120. செ. அருள்ராஜ்- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
121. ப. குகதர்சினி- அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
122. த. தர்சாயினி- உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
123. ம. கம்சா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
124. ஜெ. தாமரா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
125. கு. மோறஞ்சிதா- உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
126. சி. தர்சிகா- உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
127. து. பிரபானந்தி- உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
128. கு. சர்மிளா- உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
129. வே. பிரன்ஜா- உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
130. த. வித்தியா- உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
131. ர. அபிஷேக்- யா/மத்திய கல்லூரி
132. ஜெ. ஜெனோஷா- கரவெட்டி காசிநாதர்வித்தியாலயம்
133. ம. பிரவீணா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
134. ச. ரஜீதா- மீசாலை கிழக்கு மீசாலை
135. தே. லாவன்யன்- தாவடி இ.த.க.பாடசாலை
136. சி. சிவதர்சி- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
137. இ. கிருசாந்- யா/மத்திய கல்லூரி
138. ம. ரஜீகரன்-சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்
139. ந. நிரேஷன்- தம்பசிட்டி மெ.மி பாடசாலை
140. ப. சாஜினி- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
141. ம.டர்சினா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
142. இ. தர்சா- நீர்வேலி இ.த.க.பாடசாலை
143. நா. கார்த்திகா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
144. யோ. வசந்தா- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
145. ச. கஜனி- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
146. ஜெ. பவதாரணி- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
147. ப. சிவருஷ்சி- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
148. அ. சுயித்-யா/மத்திய கல்லூரி
149. யே. சிந்துஜா- சுன்னாகம் -திருஞானசம்பந்த வித்தியாசாலை
150. சி. வர்ணன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
151. க. நிறோசன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
152. ர. ராஜமோகன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
153. சி. லக்சாயினி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
154. இ. நிரோச் குமார்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
155. சி. சேர்யன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
156. இ. மிஅசன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
157. க. பாலசேனானி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
158. கோ. கெயிஸ்தா- உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
159. சு. சிந்துஜா- உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
160. ம. சிறோமியா- உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
161. கு. விஜிதா- உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
162. மா. ஸ்ரெலா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
163. சி. வாதுசா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
164. செ. றகீம்டீநெல்சன்- உரும்பிராய் றோ.க.த.க் பாடசாலை
165. யோ. வெசின்ரன்- உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
166. கு. நிரோஜன்- உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
167. த. நிலக்ஷன்- உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை
168. ற. ஜென்சன்- கோப்பாய் றோ.க.த.கபாடசாலை
169. நா. நளாயினி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
170. பி. டிபன்ராஜ்- உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை

## வினாத்தாள் 23-ன் விடைகள்

(01) 2 (02) 1 (03) 2 (04) 1
(05) 1 (06) 1 (07) 1 (08) 2
(09) 1 (10) 3 (11)4 (12) 4
(13) 3 (14) 2 (15)4 (16) 1
(17) 4 (18) 3 (19) 3 (20) 4
(21) 2 (22) 2 (23)1 (24)2
(25)குழந்தை+குப்பிவிளக்கு
(26) கறையான்+புத்தகம்
(27) கற்பூரம்+நெருப்பு
(28) இலையான்+உணவு
(29) பாம்பு+சிறுவன்
(30) திருடன்+முதலாளி
(31) பிரியன் (32)இளம்பச்சை
(33)இசைக்கச்சேரி,பாட்டுக்கச்சேரி
(34)கறுப்புநிறம்,சுருண்ட தலைமுடி,மெல்லியஉயரமானவர்
(35) நெல்லிரசம்
(36) 2 (37) 2 (38) 1 (39) 3
(40) 1

## பரந்தன் சந்தை இயங்குகிறது

(கிளிநொச்சி)

பரந்தன் சந்தை நேற்று முன் தினம் முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

1996ஆம்ஆண்டு இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்ட போர் நடவடிக்கையினால் இச் சந்தை பெரும் சேதத்திற்குள்ளானது.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை அடுத்து இப் பகுதியில் மீளக்குடியமர்ந்து வரும் மக்களின் நலன் கருதி இச் சந்தை புனரமைக்கப்பட்டு மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. (உ-10)

## கூரைத் தகடு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன், குருநகர் பகுதியில் கூரைகள் அற்ற வீடுகளில் வசிக்கும் மக்களுக்கு கூரைத்தகடுகளை வழங்குவதற்கு திட்டமிட்டதற்கமைய, முதற் கட்டமாக இன்று காலை 9 மணிக்கு குருநகர் சீனோரில் வைத்து ஒரு தொகுதியினர்க்குக் கூரைத் தகடுகள் வழங்கப்படவுள்ளன. (உ)

## நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று புதன்கிழமை காலை 8 மணிதொடக்கம் திருநெல்வேலி பொதுச்சந்தை ,ஆடியபாதம் வீதி, பலாலிவீதி, அம்மன்வீதி, பிள்ளையார்வீதி, மாரியம்மன் வீதிப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளதால் வளர்ப்பு நாய்களை கட்டி வைக்குமாறும் வளர்ப்பு நாய்களுக்கான உரிமத் தகடுகளை நல்லூர், கொக்குவில் உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளுமாறும் நல்லூர் பிரதேச சபையின் செயலாளர்கேட்டுள்ளார். (உ)

# புலிகளுக்கு லொறி மூலம் ஆயுதக்கடத்தல் செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் பயிற்சி முகாம் ஒன்றுக்கு பீரங்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் லொறி மூலம் கொண்டுவரப்பட்டதாக வெளியிடப்பட்ட செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என இராணுவப் பேச்சாளர் சரத் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

இச் செய்தி குறித்து போர்க்கள கட்டளைத்தளபதிகள் மற்றும் உளவுப்பிரிவு அதிகாரிகளை விசாரணைக்கு உட்படுத்தியதாகவும்,

ஆயுதக் கடத்தல்கள் பற்றிய தகவல்கள் கிடைத்தால் அதனை இராணுவ தலைமையகத்துக்கு உடன் அறிவிக்குமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

அவ்வாறு உடன் அறிவிக்கும்பட்சத்தில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்கு அறிவித்து அதனூடாக நடவடிக்கை எடுக்கமுடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இருந்து குண்டுகளுடன் கொழும்புக்கு ஒரு லொறி அனுப்பப்பட்டிருப்பதாக வவுனியா பொலிஸாரால் விடுக்கப்பட்ட அறிவிப்பை அடுத்து அந்த லொறி பூனாவ பகுதியில் தடுத்து வைக்கப்பட்டு குண்டு செயலிழக்கவைக்கும் படைப்பிரிவினரால் சோதனையிடப்பட்டதும் பின்னர் அது பாப்பாளிப் பழங்களை சேகரிக்கும் லொறி என்பது தெரியவந்தது அறிந்ததே. (தி)

# ஒருவார காலத்தில் 450பேர் சந்தேகத்தில் கைதாகினர்

(கொழும்பு)

கொழும்பில் கடந்த 5ஆம் திகதிமுதல் 11ஆம்திகதி வரை இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின்போது 450பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பிரதிப்பொலிஸ் மா அதிபர் அலுவலகம் அறிவித்துள்ளது.

பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய இத்தேடுதல் நடவடிக்கையின் போது பொலிஸார் 324ரோந்து நடவடிக்கைகளையும்,74 வீதித் தடைகளையும் ஏற்படுத்தியுள்ளனர்.

இத்தேடுதல் ரோந்து நடவடிக்கைகளின் பயனாக கொழும்பு நகரப் பகுதியில் வன்முறைச் சம்பவங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகம் நேற்று அறிவித்துள்ளது. (ம)

# விரல் அடையாளம் வழங்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்

## பிரி. தூதரகம் உத்தியோகபூர்வ அறிக்கை

(கொழும்பு)

இனிவரும் ஆறு மாதகாலப் பகுதிக்கு கொழும்பிலிருந்து பிரிட்டனுக்குப் பயண அனுமதிக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளும், அவர்கள் எந்த இனத்தைச்சேர்ந்தவர்களாக இருப்பினும் தமது விண்ணப்பத்தை கையளிக்கும்போது தத்தம் கைவிரல் அடையாளஙகளையும் வழங்குமாறு கோரபபடுவார்கள்.

அவ்வாறு விரல் அடையாளங்கள் வழங்கப்படாத விண்ணப்பங்கள் செல்லுபடியற்றவையாகக் கருதப்படுமென கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, ஆவணங்கள தொடர்பான முறைகேடுகள், மோசடிகள் என்பவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக கையாளும் வழிமுறைகள்பற்றி ஏனைய நாடுகளுடன் சேர்ந்து ஐக்கியஇராட்சியமும் ஆராய்ந்து வந்தது. கைவிரல் ரேகைகள், கண்ணின் கருமணியை அடையாளம் காணல்போன்ற உயிரியல் ரீதியான நடைமுறைகள் ஒருவரை அடையாளம் காண்பதற்கு பாவிக்கக்கூடிய நம்பகமான முறைகளாகும்.

ஐக்கியஇராட்சியம் தற்போது ஒரு முன்னோடி நடைமுறையைக் கொழும்பில் பரீட்சிக்கவுள்ளது. இந்தமுறை வெற்றிகரமானதாக அமையுமாயின் ஐக்கியராட்சியத்திற்குப் பயணம் செய்ய அனுமதி கோருவோரின் உயிரியல் அடையாளங்கள் பரந்த அளவில் சேகரிக்கப்பட வழிவகுக்கும். ஜூலைமாத இறுதிப் பகுதியளவில் இம் முன்னோடி நடைமுறை செயற்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இம் முன்னோடி செயற்படுத்துகையின் பிரதான நோக்கங்களாவன,இந்த நடைமுறைக்கு பாவிக்கப்படவிருக்கும் உபகரணங்களைப் பரீட்சிப்பதும், பெறப்பட்ட தகவல்களை ஐக்கிய இராட்சியத்திற்கு அனுப்பி வைப்பதுமாகும்.

இதன்மூலம் நாம் கற்கும் பாடம் எதிர்காலத்தில் உயிரியல் ரீதியிலான நடைமுறைகளைப் பாவிப்பது குறித்து ஆராய உதவியாக இருக்கும்.

கைவிரல் அடையாளங்கள் வலது மற்றும் இடது சுட்டுவிரல்களில் இருந்து பெறப்படும். இவை இலத்திரனியல ரீதியாக சுத்தமாக குறைந்த நேரத்தில் பெறப்படும்.

சேகரிக்கப்பட்ட உயிரியல் அடையாளங்கள் இரகசியமாகக் கையாளப்படும். இவை ஐக்கிய இராட்சியத்திலுள்ள உள்விவகார அமைச்சின் ஏற்கனவே குடிவரபு தொடர்பான விவகாரங்களில் பெறப்பட்ட தகவல்களைத் தன்னகத்தடக்கிய தகவல் பெட்டகத்தில் பாதுகாக்கப்படும்.

1998 ஆம் ஆண்டின் தகவல் பாதுகாப்புச் சட்டம் உட்பட ஐக்கிய சட்டங்கள் குடிவரவுச் சேவை மற்றும் சட்ட அமுலாக்கல் நிறுவனங்கள் உட்பட்ட குறிப்பிட்ட சில ஐக்கிய இராட்சிய அரச திணைக்களங்களும், நிறுவனங்களும் மட்டுமே இத்தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

கைவிரல் அடையாளங்களைச் சேகரிக்கும் நடைமுறையானது எந்த விதத்திலும் ஒருவரது பயண அனுமதி விண்ணப்பத்தின் பெறுபேற்றில் தாக்கம் செலுத்தாது. சேகரிக்கப்பட்ட தகவல்கள் ஐக்கிய இராட்சியத்தில் நடைபெறும் குடிவரபு வழக்குகளின் அடையாளத்தை உறுதி செயவதற்குப் பயன்படும் சகல தகவல்களும் பத்து வருடங்களின் பின் அழிக்கப்பட்டுவிடும்.

ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகள் இந்த நடைமுறையிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். பதினாறு வயதிற்குக் குறைவானவர்களுக்கான பாதுகாப்புக்களும் உள்ளன. இவர்கள் ஐக்கிய இராட்சிய அரசினால் வேலைக்கமர்த்தப்பட்டவரல்லாத பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட பொறுப்புவாய்ந்த ஒருவரின் பிரசன்னத்திலேயே தமது விரல் அடையாளங்களை வழங்க பணிக்கப்படுவார்கள்.

மேலும், இராஜதந்திர மற்றும் சில உத்தியோகபூர்வ கடவுச்சீட்டுக்களை வைத்திருப்போரும், உத்தியோகபூர்வ பணியில் தங்கிச் செல்வோரும் இந்த நடைமுறையிலிருந்து விலக்கப்படுவார்கள்.

பல்வேறு காரணங்களுக்காக கொழும்பு இந்த முன்னோடி நடைமுறையைப் பரீட்சிக்கத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. உயர்ஸ்தானிகராலயம் ஏலவே போதுமானளவு விஸா வழங்கல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

கொழும்பு விஸா பிரிவில் ஏற்கனவே அமுல்படுத்தப்படும் நடைமுறைகளும் இடவசதியும், கைவிரல அடையாளங்களைச் சேகரிக்கும் மேலதிக நடைமுறைக்கு இயைபானதாக இருக்கும். ஐக்கியஇராட்சியத்திலிருந்து உள்ளூரிலும் மேலதிக அலுவலர்கள் இம்முன்னோடி நடைமுறைபடுத்தப்படும் காலத்தில் பணிக்கப்பட்டுள்ளனர்.

கைவிரல் அடையாளம்பெறும் நடைமுறையால் விண்ணப்பதாரிகளுக்குச் சிரமம் ஏற்படாது இவர்கள் உறுதிசெய்வார்கள் என்றுள்ளது.

(உ-8)

# ஐ.நா.அமைதி காக்கும் படையில் இலங்கைப் படைக்கும் வாய்ப்பு

(கொழும்பு)

ஐ.நா.அமைதி காக்கும் படையில் சேர்ந்து கொள்வதற்கு இலங்கைக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. அமைதிப்படையில் சேர்ந்து கொள்வதற்காக 18வது ‘அண்ரட்’ என்றழைக்கப்படும் பயிற்சித திட்டத்தில் இலங்கை உட்பட 15ஆசிய பசுபிக் நாடுகள் இணைக்கப்பட்டு படையினருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இத திட்டம்மூலம சமா தானத்தைப் பேணும பல புதிய அனுகூலங்களை இலங்கைப் படையினர் பெற்றுக் கொளவார்கள். வெளிநாடுகளில் சமாதானத்தைப் பேணும் நடவடிக்கைக்காக இலங்கை இராணுவத்திற்கு விசேட பயிற்சிகள் வழங்குவதற்கென 2 வாரகாலம் இப் பயிற்சிகளை ஐ.நா.சமாதானத்தைப் பேணும் பிரிவு வழங்கி வருகிறது.

இரண்டு தசாப்த கால உள்நாட்டுப் போர் காரணமாக, ஐ.நா.பாதுகாப்புப் படையில் இணையும் வாய்ப்பு எந்தவொரு இலங்கையருக்கும் கிட்டவில்லை. தற்போது இலங்கையில் நிலவும் சமாதானச் சூழல் காரணமாக மேற்படி படையில் இலங்கையரையும் சேர்த்துக்கொள்ளும்படி ஐ.நா. சபையிடம் அரசாங்கம கோரிக்கை விடுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ)

# ஊனமுற்றோர் பக்கம்

# ஜே.வி.பியின் பார்வை

(கொழும்பு)

ஊனமுற்ற இளைஞர்- யுவதிகளுக்கு முறையான தேசியத்திட்மொன்றை வகுத்து அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் அவர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க அரசு உடன்நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர் விமல் ரத்நாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் கருத்துக்கூறுகையில், இலங்கையிலுள்ள சனத்தொகையில் 12வீதமானவர்கள் ஊனமுற்றவர்களாவார்கள்.


எனவே, இவர்கள் தொடர்பான சட்டமொன்று விரைவில் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இதற்கான திட்டங்கள் யாவும் சமூகசேவை திணைக்களத்தின் ஊடாகவே தயாரிக்கப்படவேண்டும்.

அத்துடன், நவீன தொழில் நுட்பங்களின் உதவியுடன் சுயமாக செயலாற்றக்கூடிய பயிற்சிகளை ஊனமுற்றவர்களுக்கு வழங்கி, அவர்களுக்கும சமூகத்தில் உரிய அந்தஸ்தினைப் பெற்றுக்கொடுக்க அரசு முன்வரவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

(உ-10)

## சமாதான உடன்படிக்கையின் பின்...




# தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிகள் விரிவடைய உதவவேண்டும்

## அமெரிக்காவில் வாழும் தமிழரிடம் கோரிக்கை

(நியூயோர்க்)

செல்வம்கொழிக்கும் அமெரிக்க நாட்டில் வாழும் தமிழ்மக்கள் நிதியுதவிகளை வழங்கி தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பணிகள் விரிவடைய உதவ வேண்டுமென முன்னாள் யாழ்ப்பாண நகர மேயரும் சட்டத்தரணியுமான சி.நாகராஜா அமெரிக்காவில் நடைபெற்ற ரி.ஆர்.ஓ.நிதி சேகரிக்கும் நிகழ்வில் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

தமிழர் புனாவாழ்வுக்கழகத் தலைவர் டாக்டர் அருள்ரஞ்சிதனின் வரவேற்புரையுடன் ஆரம்பமான மேற்படி நிகழ்வில், ஜே.எம்.ராஜரட்ணம் பிரதம விருந்தினராகவும், வைபவப் பிரமுகராக டாக்டர் சுகந்தி இராஜாராமும் கலந்துகொண்டனர்.

நாகராஜா அங்கு தொடர்ந்து கூறியதாவது,

கண்ணிவெடிகளில் அகப்பட்டும், எறிகணைத்தாக்குதல்கள், குண்டு வீச்சுக்கள் காரணமாக கால்களை இழந்த மககளுக்கு உதவும் பொருட்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அரும் பெரும் தொண்டாற்றி வருகின்றது. இதற்கென வெண்புறா தொழில்நுட்ப நிலையம் கொக்குவிலில் நிறுவப்பட்டது. இன்றுவரை இந்தநிலையம் சுமார் 2ஆயிரம் செயற்கைக் கால்கள், நூற்றுக்கும் மேற்பட்ட முச்சக்கரவண்டிகள் மற்றும் சக்கர இருக்கைகள், ஊன்றுகோல்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளது. இந்த நிலையத்துக்கு நோர்வே, ஜேர்மனி நாடுகளிலுள்ள புனர்வாழ்வுக்கழகங்கள் நிதியுதவிஅளித்து வருகின்றன.

காலத்தின் தேவையை உணர்ந்து ‘தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமெரிக்கா’ என்ற அமைப்பை நீங்கள் உருவாக்கி இராணுவ அக்கிரமங்களால் அல்லலுறும் எமது உடன் பிறப்புக்களுக்கு உதவும்பொருட்டு காலத்துக்குக் காலம் நிதியுதவியளித்து அரும்பெரும் தொண்டாற்றி வருகின்றீர்கள். தமிழ்மக்கள் புலம் பெயர்ந்து வாழும் பல ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளிலுமாக சுமார் 16நாடுகளில் தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளைகள் இயங்கி வருகின்றன.

1987ஆம் ஆண்டுமுதல் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தமிழ் ஈழத்தில் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் நலனகளைப் பேணும்வகையில் பல்வேறு சேவைகளையாற்றி வருகின்றது. காந்திஇல்லம், குருகுலம், சிறுவர்பாதுகாப்பு இல்லங்கள், சத்துணவு மையஙகள், மருத்துவசேவை நிலையங்கள் என கழகத்தின் சேவை வியாபித்திருக்கின்றது.

மக்களின் மீள்குடியமர்வுக்கு வசதியாக கண்ணிவெடிகள் அகற்றும் பணியில் கழகம் தீவிரமாக இயங்கிவருகின்றது. குறைந்த செலவில் நிறைவான சேவை செய்து வருகின்றது. நீங்களும் ஏனைய நாடுகளில் வாழ்ந்துவரும் மக்களும் சேகரித்து அனுப்பும் முழுத் தொகையும் மக்களை சென்றடையக்கூடிய வகையில் முறையாக செலவு செய்யப்படுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக அமுலாக்குவதற்கு கழகம் ஆற்றி வரும் சேவையை, உலக வங்கியின் நிதியுதவியுடன் இயங்கிவரும் வடகீழ் நீர்ப்பாசன விவசாயத்திட்ட அமைப்பினை அண்மையில் வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள்.

அமெரிக்காவின் நிதியுதவியுடன் ஒட்டுசுட்டானில் இயங்கிவரும் புனித பூமி என்ற சிறுவர்இல்லம் அண்மையில் தனது 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது. இங்கே நான்கு புதிய தங்குமடங்கள், கலாசாரநிலையம், மருத்துவ மையம் ஆகியன பத்து மில்லியன் ரூபா செல வில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், கல்விககூடம், தொழிற்பயிற்சி நிலையம், விளையாட்டுமைதானம் ஆகியன அமைக்கத் திட்டமிட்டுள்ளார்கள். இதற்கு ஐந்து மில்லியனுக்கு மேல் தேவையாகவுள்ளது.

மேலும், திருகோணமலை மாவட்டத்தில் திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்களின் விளைவாக சொந்தக் கிராமங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட தமிழ்மக்கள் அகதி முகாம்களை விட்டு வெளியேறி தங்கள் சொந்த இடங்களில் குடியமரத் தொடங்கியுள்ளார்கள். அவர்களுடைய வீடுவாசல்கள், பள்ளிக்கூடங்கள், ஆலயங்கள் எல்லாம் அழிந்த நிலையில் இருக்கின்றன. இந்த மக்களை மீளக்குடியமர்த்தும் பணியில் புனர்வாழ்வுக்கழகத்தினர் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களுடைய முயற்சிகள் வெற்றிபெற வேண்டுமானால் பெருந்தொகையான நிதியுதவி தேவையாக உள்ளது என்றார்.

தென்னிந்தியச் திருச்சபையின யாழ். பேராயர் வண.ஜெபநேசனும் அங்கு உரைநிகழ்த்தினார்.

(பி)

# வேலை வாய்ப்புப் பயிற்சி நிலையம் அடுத்தமாதம் திறப்பு

(கொழும்பு)

போனால் பாதிக்கப்பட்டு வேலை வாய்ப்புக்கள் இன்றித் தவிக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும், பாடசாலைக் கல்வியை இடையில் கைவிட்ட மாணவர்களை மீண்டும பாடசாலையில் சேர்ப்பதற்குமான நடவடிக்கைகளைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், யுனிசெவ் நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளவுள்ளது.

இந்தவகையில், வேலை வாய்ப்புப் பயிற்சியினை வழங்கவென கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் 40மில்லியன் ரூபா செலவில் வேலைவாய்ப்புப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் இப்பயிற்சி நிலையம், எதிர்வரும் மாதம் திறந்து வைக்கப்படவுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கொழும்புக் கிளையின் பொறுப்பாளர் சந்திரா பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும், இதன்மூலம் விடுதலைப்புலிகளின் இயக்கத்தில் இணைந்துகொள்ளும் 16வயதிற்கு கீழ்ப்பட்ட மாணவர்களின் தொகை குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வீட்டுப்பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினை என்ற காரணங்களைக் காட்டியே சிறுவர்கள்சிலர் இயக்கத்தில் சேர்ந்து கொள்கின்றனர். இதனைப் புலிகள் விரும்பவதில்லை.

கல்வி கற்பதற்கான வசதிகளும, வேலைவாய்ப்புக்களும் பெற்றுக் கொடுக்கபபடுமாயின், 16வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள் இயக்கத்தில் சேர்வதற்கான வாய்ப்புக்கள் குறையுமென புலிகளும் எதிர்பார்க்கின்றனர்.

யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் சமூகசேவைகள் செய்வதற்கான வேலைத்திட்டங்களும் முன் வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(உ-8)

# ரயில் பாதைப் புனரமைப்புக்கு 150 கோடி ரூபா தேவை

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள ரயில் பாதைகளைப் புனரமைப்பதற்கு 150 கோடி ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் ஆயிரத்து 35கிலோ மீற்றர் நீளமான ரயில் பாதைகள் உள்ளன. இப்பாதைகளில் உள்ள பழுதுகாரணமாக புகையிரதத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு 375 வேகத்தடுப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

புகைவண்டிகள் அனைத்தும் 2வருடத்திற்கு ஒருமுறை பழுது பார்க்கப்படவேண்டும். இந்தவகையில் தற்போது 260 ரயில் வண்டிகள் திருத்தவேண்டிய நிலையில் உள்ளன.

இதேவேளை, புகையிரதத் திணைகளத்துக்குக் கிடைக்கும் வருமானம இதற்குப் போதாது உள்ளதெனவும் தெரியவந்துள்ளது. (உ-8)

# சீனாவில் கடும் மழை; மண்சரிவில் 60 பேர் புதையுண்டு மரணம்

(பெய்ஜிங்)

சீனாவின் தென் மேற்குப் பகுதியிலுள்ள ஷெஜ்ஜீவான் மாகாணத்தில் நேற்று ஏற்பட்ட பாரிய மண்சரிவில் 60ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

மண்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களில் ஒரு பெண்மணியின் சடலம் மட்டுமே உடன் மீட்கப்பட்டுள்ளதாக மீட்புப் பணியாளர்கள் கூறுகின்றனர்.

மண்சரிவுகளில் சிக்கித் தவித்துக்கொண்டிருந்த 71 பேரையும் இவர்கள் உயிருடன் மீட்டுள்ளனர்.

இந்த மண்சரிவு கடந்த சில நாட்களாக அப்பகுதிகளில் தொடர்ந்த மழையின் காரணமாகவே ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவில் இத்தகைய இயற்கை அனர்த்தங்களினால் இந்த ஆண்டில் மட்டும் 570 பொதுமக்கள் உயிரிழந்திருப்பதாகவும் 2.3 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் சீன பொது மக்கள் நலன்துறை அமைச்சின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி-2)

# இந்திய-பாக். பிரச்சினை தீராவிட்டால் கார்கில் போன்ற போர் ஒன்று மீளவும் தோன்றிவிடும்

(வாஷிங்டன்)

இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்குமிடையே நிலவி வரும் பிரச்சினைகளுக்கு மிகவிரைவில் தீர்வு காணப்படாதுவிட்டால் கார்கில் போர் போன்று மீண்டும் ஒரு யுத்தம் தோன்றலாம்.

இவ்வாறு அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலசில் இயங்கும் தீவிரவாத நடவடிக்கைகளில் இருந்து பாதுகாக்கும் விவகாரங்களுக்கான அமைப்பு எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

தற்போது இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்குமிடையில் நல்லெண்ண முயற்சிகள் நடைபெற்று வருவதாகக் காணப்படுகின்ற போதிலும் இரு நாடுகளுக்குமிடையில் உட்பூசல்கள் இருந்துகொண்டே வருகின்றன.

இதனால் தெற்காசியப் பிராந்தியத்தில் பதற்றம் நீடித்தவண்ணமே உள்ளன என்று கூறிய மேற்குறித்த அமைப்பு, பாகிஸ்தான் தனது சொந்த நாட்டின் நலனில் அக்கறை கொள்வதை விடுத்து காஷ்மீர் பிரச்சினைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துவரும் அணுகுமுறையினாலேயே இப்பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மை மிகவும் பாதிப்படைந்துள்ளது. எனவே இப்பிரச்சினைகளுக்கான தீர்வு காணும் முக்கிய பொறுப்பு பாகிஸ்தானின் நிலைப்பாட்டிலேயே தங்கியுள்ளது என்று கூறியுள்ளது. (பி-2)

# வேலைக்குத் திரும்பிய ஊழியர்களை அதிகாரிகள் கண்டுகொள்ளவே இல்லை!

## அமைச்சரவை கூடி ஆலோசித்த பின்பே முடிவு

(சென்னை)

தமிழகத்தில் பதவி நீக்கப்பட்ட அரச ஊழியர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்வதா இல்லையா என்பது தொடர்பாக அமைச்சரவை கூடி ஆரார்யவிருக்கின்றது.

அரச ஊழியர்கள் இக்கூட்டம் குறித்து மிகவும் எதிர்பார்ப்புக்களுடன் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழக அரச ஊழியர்கள் கடந்த 2ஆம் திகதி முதல் மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தத்தை அடுத்து, சுமார் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ஊழியர்களை அரசு உடனடியாக பதவியிலிருந்து நீக்கியது. வேலை நிறுத்தம் செய்யப்பட்ட ஊழியர்களை தமிழக அரசு மீண்டும் பணியில் ஈடுபடுத்தும் என தாங்கள் எதிர்பார்ப்பதாக தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

எனினும், தமிழக முதல்வர் செல்வி ஜெயராம் ஜெயலலிதா பணியில் இருந்து நீக்கப்பட்ட ஊழியர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ளமாட்டார் என தமிழக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களுக்குப் பதிலாக சுமார் 15 ஆயிரம் தற்காலிக ஊழியர்களை முதலமைச்சர் வேலையில் அமர்த்தவுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இதனிடையே நேற்று முன்தினம் சென்னை, கோட்டை உள்ளிட்ட பல அரச அலுவலக ஊழியர்கள் தமது அலுவலகங்களுக்குச் சென்று இருக்கைகளில் அமர்ந்து கொண்ட போதும் அங்கிருந்த உயர் அதிகாரிகள் அவர்கள் எவரையும் கண்டு கொள்ளாதவாறு நடந்துள்ளனர்.

இதனையடுத்து பதவி நீக்கம் செய்த உயர் அதிகாரிகளிடம் சென்ற இந்த ஊழியர்கள், தம்மை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். அதற்கு அதிகாரிகள் நாங்களா உங்களை பகிஷ்கரிப்புச் செய்யச் சொன்னோம்? முறைப்படி வேலைக்கு வரும்படி தானே கூறினோம்? உங்களைப் பணியில் சேர்ப்பதா என்பது குறித்து தமிழக அரசே முடிவு செய்யும். இப்படிக் கண்ட நேரத்தில் வந்து உட்கார்ந்து தொடர்ந்து பணியில் இருக்கும் மற்ற ஊழியர்களையும் கெடுக்க வேண்டாம் என்று கூறியுள்ளனர்.

இதனையடுத்து இந்த ஊழியர்கள் அனைவரும் சோகமே உருவாக வீடு திரும்பினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

# அ.தி.மு.கழக பிரமுகருக்கு சென்னையில் வாள்வெட்டு

(சென்னை)

சென்னையில் நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்த அ.தி.மு.க. பிரமுகருக்கு வாள் வெட்டு விழுந்தது. மோட்டார் சைக்கிளில் வந்து வெட்டிவிட்டு மறைந்த இரண்டு ஆசாமிகளை பொலிஸ் தேடிவருகின்றது.

இதுபற்றி பொலிஸ் தரப்பில் கூறப்படுவதாவது,

சென்னை சூளைமேடு பஜனை கோயில் தெருவில் பால்கடை வைத்திருக்கும் அனில்குமார் என்பவர் அந்தப் பகுதி அ.தி.மு.க. பிரமுகராவார்.

சம்பவத்தின்போது அனில்குமார் தனது கடைமுன் நின்று நண்பர் பாஸ்கரன் என்பவருடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று அவர் முன் வந்துநின்றது. அதில் 2 பேர் இருந்தனர். அவர்கள் அனில்குமாரை எதிர்பாராத விதமாக வெட்டினார்கள்.

பின்னர் சைக்கிளில் ஏறி தப்பி விட்டனர். ரத்த வெள்ளத்தில மிதந்த அனில்குமார் அரசு மருத்துவமனையில் அனுமதி செய்யப்பட்டு பின்னர் தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அதே பகுதியைச் சேர்ந்த மணிகண்டன் மற்றும் பினு என்ற இரண்டு பேரும் சேர்ந்து அனில்குமாரை வெட்டியதாக பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

தலைமறைவான இரண்டு பேரையும் பொலிஸார் தேடி வருகின்றனர். முன்விரோதம் காரணமாக இந்தச் சம்பவம் நடந்திருக்கக்கூடும் என பொலிஸார் கருதுகிறார்கள். (பி)

WORLD NEWS உலக தரிசனம்

# பின்லேடன் பாகிஸ்தானில் ஒளிந்திருக்கலாம்

## ஆப்.வெளியுறவு அமைச்சர்

(வாஷிங்டன்)

சர்வதேச பயங்கரவாதி ஒஸாமா பின்லேடன் பாகிஸ்தானில் ஏதாவது ஒரு நகரத்தில் ஒளிந்துகொண்டிருக்கலாம் என்று ஆப்கானிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அப்துல்லா அப்துல்லா தெரிவித்தார்.

சி.என்.என். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது,

பின்லேடன் ஆப்கானிஸ்தானில் இல்லை. அவர் எங்கு மறைந்திருக்கிறார் என்பதை நிச்சயமாகக் கூறமுடியாது. ஆனால் அவர் பாகிஸ்தானில் ஏதாவது ஒரு நகரில் ஒளிந்திருக்கலாம் என்பது என் கருத்து.

2001ல் அமெரிக்கா மீது அல் கெய்டா பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து சர்வதேச பயங்கரவாதி ஒஸாமா பின்லேடனை யு.எஸ்.இராணுவத்தினர் தேடி வருகின்றனர்.

அல்கெய்டா தீவிரவாதிகளில் பலரை பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் முக்கிய பெரு நகரங்களிலேயே கைது செய்துள்ளனர். எனவே பின்லேடனும் ஏதாவது ஒரு பெரிய நகரத்தில் ஒளிந்திருக்கலாம் எனத் தெரிகிறது.

பின்லேடனுக்கு ஆப்கானிஸ்தானில் ஆதரவு இல்லை. ஆனால் தலிபான்கள் மீண்டும் தங்கள் கைவரிசையைக் காட்டக்கூடும். எனினும் அவர்களால் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க முடியாது என்றார் அப்துல்லா அப்துல்லா.(பி)



அஸாமில் கடந்த சிலவாரங்களாக கடும் மழை பெய்து வருகின்றது. இதனால் அங்கு பெரும் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. குவஹாட்டியிலிருந்து 70 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஒரு கிராமத்தில் வெள்ள நீர் புகுந்ததால் தனது மகளை தோளில் சுமந்தபடி பாதுகாப்பான இடத்தை நோக்கி நீந்தி வரும் ஒருவரைப் படத்தில் காணலாம்.

# இந்தோ. நாடாளுமன்றில் குண்டு வெடித்தது

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை குண்டுவெடித்தது. இருந்த போதிலும் இந்தக் குண்டுவெடிப்பில் சிறிய அளவிலேயே சேதம் ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இஸ்லாமிய தீவிரவாதிகள் கும்பல் ஒன்றை பொலிஸார் சில தினங்களுக்கு முன் கைது செய்தனர். அக்கும்பலிடமிருந்து பெருமளவில் வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டன. இந்நிலையில் தலைநகர் ஜகார்த்தாவில் நடாளுமன்ற கட்டடத்தில் குண்டுவெடித்துள்ளது.

இஸ்லாமிய தீவிரவாதிகள் மற்றும் இனக் கலகக்காரர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை அந்நாட்டு அரசு எடுத்துவரும் சமயத்தில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

நாடாளுமன்றக் கூட்டத்திற்கு விடுமுறை விடப்பட்டிருந்ததால் உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை. (பி)

# ஐ.நா. தலைமையில் மட்டுமே இந்தியப்படை ஈராக் செல்லும்

(புதுடில்லி)

ஐக்கிய நாடுகளின் தலைமையின் கீழ் மட்டுமே தமது படைகளை ஈராக்கிற்கு அனுப்ப முடியும். அமெரிக்கப் படைகளின் தலைமையின் கீழ் அவர்களை அனுப்ப முடியாது என்று இந்தியா திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையில் நேற்று முன்தினம் மதியம் கூடிய பாதுகாப்புத்துறையின் அமைச்சரவை இந்த முடிவை எடுத்துள்ளது.

ஈராக்கில் மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், இயல்பு வாழ்க்கையினை ஏற்படுத்தவும் இந்தியப் படைகளைத் தந்துதவுமாறு அமெரிக்கா அந்நாட்டிடம் கேட்டதன் அடிப்படையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியா-பாகிஸ்தானிடையேயான பிரச்சினைகளுக்கு ஆலோசனைகளை வழங்கி வருவதுடன், சமாதானப் பேச்சுக்களுக்கு இரு தரப்பினருக்கும் உதவிகள் வழங்குவதற்கும் அமெரிக்கா விருப்பம் தெரிவித்து வந்தது.

தற்போதைய இந்தியாவின் நிலைப்பாடு இரு நாடுகளுக்குமிடையில் சிறு மனக் கசப்புக்களை ஏற்படுத்தி விடலாம் எனக் கருதப்படுகின்றது. (பி-2)

# அமெரிக்கப் படைகள் மீதான தாக்குதல்கள் அதிகரிக்கவாம்

## ரம்ஸ்பீல்டு எச்சரிக்கை

(வாஷிங்டன்)

ஈராக்கிலுள்ள அமெரிக்க வீரர்கள் மீது தாக்குதல் சம்பவங்கள் அதிகரிக்கக் கூடும் என்று அமெரிக்கப் பாதுகாப்புத் துறை அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்டு எச்சரித்தார்.

இதுகுறித்து வாஷிங்டனில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டியில், ஈராக்கில் கோடை காலத்தில் அமெரிக்க வீரர்கள் மீது தாக்குதல் நடப்பதற்கான அபாயம் நிலவுகிறது. பாத் கட்சியினர் இம்மாதம் நடத்தவிருக்கும் விழாவின்போது இச்சம்பவங்கள் அதிகரிக்கக்கூடும். ஈராக்கின் வட பகுதியில் தான் இது போன்ற தாக்குதல்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

அமெரிக்க வீரர்கள் மீது கொரில்லாத் தாக்குதல்கள் நடைபெறுவதற்கான வாய்ப்பில்லை. (பி)

கனடாவைச் சேரந்த 12 வயது சிறுவன் ஷேன் பொளமேனுக்கு இருதய மாற்றுச் சத்திரசிகிச்சை நடத்தப்பட்டது. தனது பழுதடைந்த இருதயத்தைப் பார்க்கும் வாய்ப்பும் அந்த சிறுவனுக்குக் கிடைததுள்ளது.



வசையிலா வான் பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்
– குறள்

# வலம்புரி

## நாதத்தின் நாதன்

நாதஸ்வர மேதை அளவெட்டியூர் என்.கே. பத்மநாதன் அவர்கள் இந்த உலகத்தை விட்டு நீங்கிவிட்டார். இசையுலகில் தனக்கெனத் தனியிடம் வகித்த நாதஸ்வர மேதை பத்மநாதன் அவர்கள் தனது இசையால் தெய்வீகத்தைப் பரப்பிய பெருந்தகை.

அவரின் நாத வேள்வியில் நனைந்தவர்கள், தம்மை மறந்து தலைவன் தாள தலைப்பட்டார்கள். நல்லூர்த் திருவீதியில் பத்மநாதன் நாதம் இசைக்க வேல்முருகன் வீதி வரும் காட்சி காண்போரை பரவசப்படுத்தியது. ஓர் கலைஞன் எவ்வாறு ஒழுக்க முடையவனாக வாழவேண்டும் என்பதை நிஜத்தில் வாழ்ந்து காட்டிய்வர் அவர். அவரின் நாத இசையால் ஈழத்தமிழர்களின் புகழ் உலகெங்கும் வானுயர்ந்து பரவியது.

அத்தகைய பெருந்தகை இன்று இந்தப் பூவுலகில் இல்லையென்ற செய்தி, அவரின் இசையால் வசமாகிய இதயங்களை முகாரி இசைக்க வைத்துள்ளது.

நேற்று இருந்தவா இன்று இல்லை என்ற பெருமையுடைய இந்த உலகில் இறப்பு ஒன்று தான் பிறப்புரிமை என்ற நேருவின் வார்த்தைகள் நினைவுக்குரியவையாயினும், இந்த மண்ணில் வாழ்ந்து இசையால் மனித இதயங்களை ஈர்த்த நாதஸ்வர மேதை என்.கே.பத்மநாதனின் பிரிவில் அந்த நினைவுகளை ஏற்றுக்கொள்ள நெஞ்சம் மறுக்கவே செய்கிறது.

கடந்த ஆண்டு நல்லூர் ஆலயத்தில் நாத வேள்வி நடத்திய பத்மநாதனின் நாத ஓசை இந்த ஆண்டு நல்லூர் திரு வீதியில் இடம் பெறமாட்டாது என்ற உண்மையை ஒருகணம் எண்ணும் போது இதயத்தின் ஒலிப்புகள் நிசப்தமாகின்றன.

சிரித்திரன் ஆசிரியர் சிவஞானசுந்தரத்திடம் வாசகர் ஒருவர் கேள்வி கேட்டார். நீங்கள் உங்களை மறந்த சந்தர்ப்பம் உண்டா? அந்தக் கேள்விக்கு ஆம் என்று பதிலளித்த சிவஞானசுந்தரம் அந்தச் சந்தர்ப்பத்தைக் கூறுகையில், நாதத்திற்கு நாதன் பத்மநாதன் நல்லூர் உள்வீதியில் ‘‘நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில் எல்லாம் மறப்பேனடி கிளியே” என்று நாதம் வாசித்த போது என்னை மறந்தேன் என்று பதிலளித்தார். அந்தப் பதிலில் நாதத்தின் நாதன் பத்மநாதன் என்ற வரிகள் எத்துணை தீர்க்க தரிசனமானவை என்பதை எண்ணும் போது கண்களின் ஓரம் ஈரமாகவே செய்கிறது.

பத்மநாதன் என்ற நாத மலைசரிந்து விட்டது. அவரின் இழப்பை ஈடு செய்வது இயலாத காரியம்.

# அதி உயர் பாதுகாப்பு வலயங்களின் தொகை

# ஒப்பந்தத்தின் பின்னர் அதிகரித்துள்ளது

## மனிதநேய அமைப்புகளின் கூட்டத்தில் கியூடெக் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு உடன படிக்கை ஏற்பட்டதன் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களின் எண்ணிக்கைகள் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக குடாநாட்டு மக்களின் இலகுவான நடமாடும் சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டைகளும், தடங்கல்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கியூடெக் நிறுவனத்தின் நிர்வாகப்பணிப்பாளர் வண.பிதா சீ.ஜீ ஜெயக்குமார் அடிகள் நேற்று யாழ். பஸ்தியன் உணவகக்கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கொழும்பு மனித நேய அமைப்புகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட வடபுலத்துக்கான குழுக் கூட்டத்தில் உரை யாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் டாக்டர். ஜீ.தியாகராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கொழும்பிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள், மற்றும், மனித நேய அமைப்புகளின் ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் பங்கு கொண்டிருந்தனர்.

வண.பிதா சீ.ஜீ.ஜெயக்குமார் அடிகள் அங்கு தொடர்ந்தும் குறிப்பிடும்போது,

குடாநாட்டில் மக்களின் நடமாடும் சுதந்திரத்துக்குக் கேடு ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் பெரும் துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்து வருகின்றனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முன்னர் நாம் இராணுவ அதிகாரிகளுடன் எமது நிறுவனங்கள் ஒத்திசைவான முறைகளைப் பேணி மக்கள் எதிர்நோக்கியிருந்த பிரச்சினைகளை விவாதித்தோம். பல பிரச்சினைகளைத் தீர்த்தோம். ஆனால் இப்போது அந்த நிலை இல்லை எனக் குறிப்பிட்டார்.

ஊற்று நிறுவனத்தின பணிப்பாளா பொறியியலாளர் பொ.விக்னேஸ்வரன் அங்கு குறிப்பிடும்போது.

யாழ்பாண மாவட்டத்தில் மொத்தமாக 435கிராம சேவையாளர் பிரிவுகள் இருக்கின்றன. இவற்றில் 57கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் வாழும மக்கள பாதிககப்பட்டுள்ளனர். எமது பிரதேசத்தின் வளம்மிக்க பயிர்ச்செய்கை நிலத்தில் 50சதவீதமானவை இன்னமும் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படாமல் இருக்கின்றது.

மொத்தமாகவுள்ள 12ஆயிரம் ஹெக்டேயர் நெற்பயிர்ச்செய்கை நிலத்தில் 7ஆயிரம் ஹெக்டேயர் மட்டுமே செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல், வளமிக்க செம்மண் பயிர்ச்செய்கை நிலத்தில் 8ஆயிரம் ஹெக்டேயரில் 4ஆயிரம் ஹெக்டேயரில் மட்டுமே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த நிலையில எமது விவசாயிகள் பெரும் துன்பங்களையும் இன்னல்களையும் அனுபவித்து வருகின்றனர்.

நாம் எமது மக்களின் அடிப்படைப பிரச்சினைகளை வெளிக் கொணர்கின்ற போது ‘‘எமக்கு புலிமுகம் சூடப்படுகின்றது.” ஆனால் உண்மையாகவே நாம் மக்களின் பிரச்சினைகளையே முன்வைக்கின்றோம். இவற்றிற்குரிய தீர்வுகள் எதுவுமே கிடைக்கவில்லை. நாம் யாரிடம் போய எமது பிரச்சினைகளை முன்வைப்பது எனத் தெரியாத நிலையில் உள்ளோம். எமது மக்கள் படும் துன்பங்களை யாரிடம் கூறுவது எனத் தெரியாது நிற்கின்றோம் எனக் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலாளர் திருமதி. பொன்மலர் இராஜேஸ்வரன் அங்கு குறிப்பிடுகையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல கிராமங்களில் வாழ்கின்ற ஏழை, எளிய மக்கள் தமது அன்றாட சீவியத்தைக் கொண்டு செல்வதற்கும் பெரும்கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். இவர்களுக்கு அரசினாலோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களினாலோ எத்தகைய உதவிகளும் இதுவரை வழங்கப்படவில்லை.

இந்நிலையில் இப்படியான ஏழை எளிய மக்களின் துயரங்களையும். கஷ்டங்களையும் யார் போக்குவதற்கு முன்வருவார்கள் எனக் கேள்வியெழுப்பினர்.

இக்கூட்டத்தில், கொழும்பிலுள்ள மனிதநேய அமைப்புகளின் நிர்வாகப் பணிப்பாளர் ஜீவன் தியாகராஜாவும் உரைநிகழ்த்தினார்.(உ-77)

## அரசியல் நிலைவரம் பற்றி விளக்கமளிக்க

## கதிர்காமர் அடுத்த மாதம் இந்தியா பயணம்



(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம்குறித்து இந்திய அரசிற்கு விளக்கிக் கூறுவதன் பொருட்டு பொதுஜன ஐக்கியமுன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷமன் கதிர்காமர் அடுத்தமாதம் இந்தியாவிற்கு செல்லவுள்ளார்.

இவர் தற்போதைய அரசியல் நிலைமைபற்றி இந்தியத்தலைவர்களுக்கு விளக்கிக் கூறுவதுடன் அதிகரித்துவரும் குற்றச்செயல்கள், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான கெடுபிடிகள் என்பன தொடர்பாகவும் விளக்கிக் கூறவுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியாவை வருந்தி அழைக்கும் நடவடிக்கையிலேயே பொதுஜன ஐக்கியமுன்னணி ஈடுபட்டுவருவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது இவ்விதமிருக்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன்பின்னர் இரு தடவைகள் இந்தியாவிற்கு விஜயம்செய்து நாட்டு நிலைமைபற்றி விளக்கமளித்திருப்பதுடன், அமைச்சர்கள் மற்றும தமிழ்க்கட்சி உறுப்பினர்களும் இதுவிடயமாக அங்குசென்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

### சுகாதாரக் கண்காட்சி

(கொழும்புத்துறை)

யாழ்.மாநகரசபையில் அமைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி வார விசேட காரியாலயத்தில் சுகாதாரக் கண்காட்சியை யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் நேற்று முன்தினம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி கலந்து கொண்டார். (உ-51)

## வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்த்து

## ஒரு இலட்சம் பேரின் கையெழுத்து சேகரிக்கும் இயக்கம் ஆரம்பம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பை ரத்துச்செய்து வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனி மாகாணசபைகளை அமைக்கும்படி கோரி, சிங்கள சன்விதானய என்னும் அமைப்பு நேற்று முன்தினம் முதல் ஒரு லட்சம்பேரின் கையெழுத்துக்களை திரட்டும் வேலையை ஆரம்பித்துள்ளனர்.

இக் கையெழுத்து திரட்டும் இயக்கம் திருமலையில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

படிப்படியாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளது.

திட்டமிட்டவாறு ஒருலட்சம் பேரின் கையெழுத்துக்கள் திரட்டப்பட்டதும் அவற்றுடன் கூடிய மகஜர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. (உ)

## குடாநாட்டுக் குழந்தைகளுக்கு

## ஜப்பான் மூளைக்காய்ச்சல் தடுப்பு மருந்தேற்றல்

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல குழந்தைகளிற்கும் இவ்வருடம் முதல் ஜப்பான் மூளைக்காய்சல் நோய்க்கெதிரான தடுப்பு மருந்து ஒன்று புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு வழங்கப்படவுள்ளதாக சுகாதார சுதேசிய மருத்துவத்துறை அமைச்சு சகல சுகாதார வைதத்திய அதிகாரிகளிற்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் மற்றய மாவட்டங்களில் இந்த ஜப்பான் மூளை காய்ச்சல் நோய்க்கெதிரான தடுப்பு மருந்து கடந்தவருடங்களில் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் யாழ்ப்பாணம், அனுராதபுர மாவட்டங்களில் இப் புதிய நோய்த்தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

மேலும் ஒரு வயது முடிவடைந்த குழந்தைகளுக்கு முதலாவது ஊசி போட்டு, 1-4வார இடைவெளியில் இரண்டாவது ஊசி ஏற்ற வேண்டும் எனவும் இரண்டு தொடக்கம் பத்து வயதுக்குட்பட்ட 1-4வார இடை வெளியில் இரு ஊசி போடப்பட வேண்டும் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ - 252)

### தினசரி தியானம்

## உருவவழிபாடு

உருவவழிபாடு மனதை தூய்மைப்படுத்துகின்றது. இறைவனிடம் ஈடுபாட்டை உண்டாக்குகின்றது. இறை உணர்வை ஏற்படுத்துகின்றது. மனம் தெய்வீக நிலை அடைகின்றது. எவ்வாறு நினைக்கிறானோ? அவ்வாறே உருவாகிறான். என்பது மாற்றமுடியாத மனநூல் வியாதியாகும். பக்தன் கடவுளை விக்கிரகத்தின் வடிவில் பார்க்கிறான். தொடக்கத்தில் பக்தி யோகத்தில் முழுமை பெறாமையால் பக்தனால் எங்கும் பரவி இருக்கும் இறைவனுடன் தொடர்புகொள்ள முடியவில்லை

*சுவாமி –சிவானந்தர்*

## கொடுக்கும் வரமுடையாள்

கஞ்ச மலரடியாள்
கார்மேல் தாய்மரியாள்
தஞ்சமென்று வந்தவர்க்கு
தயவு நிறைவுடையாள்
மஞ்ச நிலவுடையாள்
மாசில்லா உற்பவத்தாள்
கெஞ்சி வருபவர்க்கு
கொடுக்கும் வரமுடையாள்

- அல்லையூர் ஏகலைவன்

அல்லைப்பிட்டி உத்தரிய அன்னையின் திருவிழாவையொட்டிய கவிதை

# நாதஸ்வர மேதையை நாடு இழந்துவிட்டது

## அமைச்சர் மகேஸ்வரன் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

நாதஸ்வர இசை மேதை அளவையூர் என்.கே.பத்மநாதனின் பிரிவுச் செய்து என்னை சோகத்தில் ஆழ்த்திவிட்டது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய முருகனை பிரார்த்திக்கிறேன்.

இவ்வாறு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் வெளியிட்ட இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

எமது நாட்டில் ஈடிணையற்ற நாதஸ்வர வித்துவானாக சங்கீதக் கலைக்கு புத்துயிரூட்டி இசையுலகில் முடிசூடா மன்னனாக திகழ்ந்த நாதஸ்வர வித்துவான் அளவெட்டி திரு.என்.கே.பத்மநாதன் இறையடி சேர்ந்தார் என்ற செய்தி அறிந்து அளவற்ற துயரமடைந்துள்ளேன்.

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக எங்கெங்கு தமிழ்கூறும் நல்லுலகம் உண்டோ அங்கெல்லாம் அவரது நாதஸ்வர ஓசை ஒலியெழுப்பி சங்கீதத்தின் எல்லையை தொட்டுநின்றது.

ஆண்டுதோறும் நடைபெறும் நல்லூர் கந்தசுவாமி உற்சவ தினங்களில் ஆசார சீலனாகக் காட்சியளித்து முருகனுக்கு இசைமாலை சூடிய நாட்கள் எம்மால் மறுக்க முடியாது. ஆலய உற்சவ தினமான 26 நாட்களும் முருகனின் தரிசனத்தோடு அவரது நாதஸ்வர இசையைக் கேட்கவேண்டும் என்று நான் மட்டுமல்ல அனைத்துப் பக்தர்களும் காத்திருப்பார்கள். எந்தவொரு தீய பழக்கவழக்கங்களுக்கும் ஆளாகாமல் தன்னையே புடம்போட்டு இசை வேள்வியையே நடத்திவந்தார்.

தும்பைமலர் போன்ற வெள்ளை நிறவேட்டி சால்வையுடன் நெற்றி நிறைய திருநீறு அணிந்து அவர் தன்னை மறந்து நாத உபாசனை செய்வதை யாரும் மறக்கமுடியுமா? முருகனுடைய முகத்தைப் பார்ப்பதா அல்லது அவருடைய இசையைக் கேட்பதா என்று திண்டாடும் சந்தர்ப்பம் எனக்குப் பலதடவைகள் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பில் நடந்தேறிய 2ம் உலக இந்து மாநாடு ஆரம்ப விழாவன்று எந்தவொரு எதிர்பார்ப்பின்றி அவர் தானே முன்வந்து அந்த மங்கள இசையை அளித்து எம்மையெல்லாம் பரவசமாக்கினார். மரத்திலான துளை கருவிமூலம் தன்னிசையால் இந்த உலகையே மயங்கவைத்த பெருமை அவருக்கு உண்டு. எமது நாட்டில் தலைசிறந்த வித்துவானாகத் திகழ்ந்த அவரின் நாதஸ்வரத்தில் துள்ளி விளையாடிய தோடியை சங்கராபரணததையும் கல்யாணியையும் நாம் இனி எங்கே கேட்கப்போகிறோம் என்று நினைக்கும்போது நெஞ்சம் உருகிறது.

இறப்பு என்பது இறைவனுடைய இயற்கை விளையாட்டு ஆனால், என்றும் இறையோதியாக திகழ்ந்த திரு. என்.கே.பத்மநாதன் இறந்த செய்தியை எம்மால் தாங்க முடியாது உள்ளது. அவருடைய குடும்பம் நல்லதொரு தலைவனை இழந்துவிட்டது. ஆனால், எமது இசை உலகம நல்ல தூமான கலைஞனை இழந்து தவிக்கிறது. தனது நல்லதொரு புதல்வனை இழந்த கலைத்தேவி கண்ணீர் வடிக்கிறார் என்று அந்த இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# பிரான்ஸ் கடலில் மூழ்கி கோப்பாய் இளைஞன் மரணம்

(கோப்பாய்)

பிரான்ஸ் கடலில் நண்பர்களுடன் குளிப்பதற்காகச் சென்ற கோப்பாயைச் சேர்ந்த இளைஞன் கடலல் மூழ்கி பரிதாபகரமாக மரணமானார்.

இத்துயரச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. சம்பவத்தில் பிரான்ஸில் வசித்துவந்த, கோப்பாய் தெற்கு பழைய பொலிஸ்நிலைய ஒழுங்கையைச் சேர்ந்த தவராசா புவனேஸ்வரன் (வயது - 29) என்ற இளைஞனே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இவர் இம்மாத இறுதிக்குள் சொந்த ஊரான கோப்பாய் வருவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார் எனவும், தனது வருகை குறித்து பெற்றோர் சகோதரர்களுக்கு அறிவித்திருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலத்தை இலங்கைக்கு எடுத்துவருவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. (இ)

## உடத்தலவின்ன படுகொலை வழக்கு

# சடலங்களில் இருந்த ரவைகள் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டன

(கொழும்பு)

உடத்தலவின்ன படுகொலைச் சம்பவத்தின்போது இறந்தவர்களது உடல்களில் இருந்த துப்பாக்கி ரவைகள் தெல்தெனிய மஜிஸ்திரேட் நீதிமன்றில் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டதாக கண்டி சட்ட மருத்துவ அதிகாரி டாக்டர் அசோக பண்டார செனிவரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ட்ரயல் அட்பார் முறையில் இவ்வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சட்டத்தரணி ஆர்.ஐ.ஒபயசேகர குறுக்கு விசாரணை செய்த போது அவர் இவ்வாறு கூறினார்.

நீதிமன்றில் தொடர்ந்து சாட்சியமளித்த அவர், துப்பாக்கி ரவைகளை நீதிமன்றில் ஒப்படைப்பதற்கு முன்னர் அதனைப்பத்திரப் படுத்தி வைத்திருந்ததாகவும்,தெரிவித்துள்ளார்.

இவ்வழக்கில் சிறைச்சாலை மருத்துவ அதிகாரி வழக்கின் 12 ஆவது பிரதிவாதியின் மருத்துவ அறிக்கையையும் சமர்ப்பித்தார்.(தி)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச ஊரக தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று பி.ப.3.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு அனைத்து ஊரக தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலிகாமம் கோட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (ந-5)

## தொழுநோயாளர் இனம் காணப்பட்டனர்

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆறு மாதகாலப்பகுதியில் 21 பேர் தொழுநோயாளிகள் என இனம் காணப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட சுகாதார திணைக்கள தொழுநோய் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் இந்நோயால் 32 பேர் இனம் காணப்பட்டதாகவும்இந்த வருடத்தில நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த நோயின் பரவுகை தடுப்பு முறைகள் தொடர்பாக பொதுச்சுகாதார உத்தியோகத்தர்கள்,குடும்ப சுகாதார உத்தியோகத்தர்கள் ஊடாக விழிப்புணர்வுக் கல்வி வழங்கப்பட வேண்டும் எனவும் ஆரம்பத்திலேயே நோய் இனங்காணப்பட்டதும்உடனடியாக சிகிச்சை பெறுவதன் மூலம் குணப்படுத்தலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இந்நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் சில விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் ஒவ்வோர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் ஊடாகவும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-252)

# பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க அரசு கடும் முயற்சி செய்கிறது

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசு-விடுதலைப்புலிகள் சமாதானப்பேச்சுவார்த்தையை மீண்டும் விரைவில் ஆரம்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடனும் தொடர்பு கொண்டு காத்திரமான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதாக அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் அமைக்கப்பட்டுள்ள கைத்தொழில் அபிவிருத்தி ஆலோசனை நிலையத்தை நேற்றுக் காலை திறந்து வைத்துப் பேசும் போதே அமைச்சர் பேராசியர் ஜி.எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்;

பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவின் தேசிய ஐக்கிய முன்னணி அரசாங்கம் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதில் வைத்துள்ள நம்பிக்கை காரணமாகவே சர்வதேச சமூகம் மூன்று வருட கால திட்ட அடிப்படையில் 4 ஆயிரத்து 500 கோடி ரூபாவை இலங்கைக்கு வழங்க முன்வைந்துள்ளது.

ஐக்கிய தேசியமுன்னணி அரசு முகாமைத்திட்டத்துடன் செயற்படுத்துவதினாலேயே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கொழும்பு தவிர்ந்த வெளிமாவட்டங்களிலும் தங்கள் முதலீடுகளைச் செய்வதற்கு முன்வந்துள்ளனர் என்றும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (வ)

## நீதிமன்றத்தால் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த முல்லைத்தீவைச்சேர்ந்த தேவராஜ் இராஜேந்திரகுமார் என்பவர் திருகோணமலை உயர்நீதிமன்றத்தினால் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தடைசெய்யப்பட்ட ஆயுதமான ரீ-56 ரக துப்பாக்கி ஒன்றையும் 22 ரவைகளையும் வைத்திருந்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இக்குற்றச்சாட்டை அரச சட்டத்தரணி மீளப்பெற்றதையடுத்தே இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (வ)

## நெடுந்தீவுக்கு பஸ் செல்கிறது

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் சேவையை ஆரம்பிப்பதற்கென போக்குவரத்து சபையின் பஸ் ஒன்று இன்று நெடுந்தீவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்த பஸ் ஊர்காவற்துறையிலிருந்து கடற்படையின் துருப்புக் காவிக் கப்பல் மூலம் கொண்டு செல்லப்படவுள்ளது.

கடந்த சில மாதங்களாக பஸ் சேவை இல்லாததால் நெடுந்தீவு மக்கள் தமது உள்ளூர் போக்குவரத்தில் பல சிரமங்களை எதிர்நோக்கி இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்க்து. (இ-5,48)

## வீபத்தில் படுகாயம்

(சண்டிலிப்பாய்)

மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் வாழைக்குலையுடன் சைக்கிளில் சென்றவர் படுகாயம் அடைந்தார்.

நேற்று முன்தினம் கீரிமலை வீதி தொட்டிலடிச் சந்திக்கு அருகாமையில் இடம் பெற்ற இந்த விபத்தில் கிரான்பற்றைச் சேர்ந்த எஸ். இரத்தினலிங்கம் என்பவரே படுகாயம் அடைந்தவராவார்(உ-102)

## பாதுகாப்பு...

வதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச் சாத்திட்டதாகவும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இவர்களின் இஸ்ரேலிய விஜயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ விடுத்த அறிக்கையில் பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரபபனவை இஸ்ரேலுக்கு வருமாறு இஸ்ரேல் அரசு ஆறுமாதங்களுக்கு முன்பே அழைப்பு விடுத்திருந்தது என்றும் கடற்படைத்தளபதி வைஸ் அடமிரல் தயாசந்தகிரிக்கு ஒரு வருடத்திற்கு முன்பே அழைப்பு விடப்படடிருந்ததாகவும் அப்போதைய சூழ்நிலைகளினால் அவர்களது இஸ்ரேலிய விஜயம் பிற்போடப்பட்டது என்றும் இருவரும் ஒரே நேரத்தில் சென்றமை தற்செயலாக ஏற்பட்ட நிகழ்வென்றும் தெரிவித்திருந்தார்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவினதும், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியினதும் இஸ்ரேலிய விஜயம் உள்நோக்கம் எதுவுமற்றதென்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ கூறியபோதிலும், பாதுகாப்பு அமைச்சரும், கடற்படைத் தளபதியும் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரையும் கடற்படை அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சுவார் த்தை நடத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது. (ம)

# பிரதமரின் சிந்தனைக்கு புதிய செயல் வடிவம்

(கொழும்பு)

அரசின் வேலைத் திட்டங்களை அவதானிக்க எதிர்க்கட்சி உறுப்பினர்களை உள்ளடக்கிய அவதானிப்புக்குழுக்களை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

ஐவருக்குக் குறையாததும் எண்மருக்கு மேற்படாததுமான அங்கததவர்களைக்கொண்ட இக்குழுவிற்கு எதிர்க்கட்சி உறுப்பினர் தலைமை வகிப்பார்.

மேலும் அமைச்சர்களோ, பிரதி அமைச்சர்களோ , அமைச்சரவை அங்கீகாரமற்ற அமைச்சர்களோ இந்தக் குழுவில் அங்கம் வகிக்கமாட்டார்கள். சகல அமைசுகளின் நடவடிக்கைகளுக்குமாக இவ்வாறான 14 குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

அமைச்சரகள், பிரதியமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்கள், செயலாளர்கள், மக்கள் சேவையாளர்கள் உள்ளிட்ட எந்த ஒருநபரின் செயற்பாடுகளையும் பரிசீலிக்கும் அதிகாரம் இந்தக் குழுவுக்கு உண்டு. குழுவின் அவதானிப்புக்களை மூன்று மாத காலத்திற்குள் அதன் தலைவர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இது பற்றிக் கருத்து வெளியிடுகையில், நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கும் பிரதமரின் புதிய சிந்தனையே தற்போது செயல் வடிவம் பெற்றுவருகின்றது என்றார். (உ-8)

## லெப்.கேணல் ரீகனின் 13ம் ஆண்டு நிறைவு

(மட்டக்களப்பு)

லெப்.கேணல் ரீகனின் 13ஆவது ஆண்டு நிறைவுதின நிகழ்வுகள் அவரது பிறந்த ஊரான மட்டக்களப்பு வெல்லாவெளியில் இன்று நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது அவரது உருவச்சிலை மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் அவர்களால் திரைநீக்கம் செய்து வைக்கப்படும். (இ-5,14)

## "அம்மா நலமா" தொடக்க விழா இன்று

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் திரைப்பட உருவாக்கற்பிரிவாகிய நிதர்சனம் தயாரித்து வழங்கும், ந.கேசவராஜனின் "அம்மா நலமா" என்ற முழு நீளத்திரைப்படத்தின் தொடக்க விழா, இன்று பிற்பகல் 5மணிக்கு கொக்குவில் பொற்பதி வீதியில் அமைந்துள்ள கலை பண்பாட்டுக் கழக அலுவலகத்தில் நடைபெறும் (இ-3)

## கைதான...

தில்பயணம் செய்தவர்கள் இடைநடுவில் வாகனத்தில் ஏறினார்கள் என்றும் வாகனத்தில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருப்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை எனவும், அறிந்திருந்தால் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரிகள் முன்னிலையில் சோதனையிட அனுமதித்திருக்க மாட்டார்கள் என்றும் தமது தரப்பில காரணங்களை முன்வைத்து வாதிட்டு வாகனத்தில் பயணம் செய்தவர்களுக்கு எதிராகக் குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியாதென நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

வாகனச் சாரதியிடம் வாகன அனுமதிப் பத்திரமும், வாகனம் சார்ந்த ஆவணங்களும் இல்லை எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரது வாதங்களையும் கருத்தில் எடுத்த நீதிவான் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படுமா? இல்லையா? என்பது பற்றிக் குறித்த தீர்மானம் எடுப்பதற்காக எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (ந-3)

## தந்தை...

காயமடைந்தவராவார்.

மதுபோதையில் வந்த தகப்பன் படம்பார்த்துக் கொண்டிருந்த தனது மகனைக் குத்தூசியால் முதுகில் குத்தியக் காயப்படுத்தியுள்ளார்.(ந-5,3)

## கண்காணிப்புக்...

மையை அடுத்தே நேற்றைய சந்திப்பு இடம்பெறவில்லை.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றிவின் ரெலிவ்சனுக்கும் கேணல் சூசைக்கும் இன்று நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையின்போது நேற்று முன்தினம் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நடத்திய பேச்சுக்களின் போது பிரஸ்தாபிக்கப்பட்ட கிண்ணியா குரங்குப் பாஞ்சான் முகாம் அகற்றுதல், கடற் பயணததின்போது கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்குமிடையே ஏற்படவருக்கும் மோதல்களைத் தவிர்த்தல், மோதல்கள் ஏற்படாதிருக்கக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட திட்டம் என்பன தொடர்பாக ஆராயப் படவுள்ளது. (ம)

## இளைஞர் குழு தாக்கியது

இளைஞர் குழுவால் தாக்கப்பட்டு படுகாயம் அடைந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 5.30 மணியளவில் அரியாலைப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மாலை நேரங்களில் கூடும் இளைஞர்க்ள் அப்பகுதியால் செல்லும் யுவதிகளிடம் பகிடிவிட்டதாகவும் அதனைத்தட்டிக்கேட்கச் சென்ற சமயம் இத்தாக்குதல் இடம் பெற்றதாகவும் தெரிய வருகிறது.

இச்சம்பவத்தின் போது அரியாலை கனகரத்தினம் வீதியைச் சேர்ந்த சின்னையா கிருஷ்ணபிள்ளை(வயது-47) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (ந-5,3)

இப்பத்திரிகை வலம்புரி [illegible] ஆல் இல.15 [illegible] வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.07.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.